

# வல்லிக்கண்ணன்

# காலத்தின் குரல்

## வல்லிக்கண்ணனுடன்

## சிவசுவின் பேட்டி

காலத்தின் குரல்
(வல்லிக்கண்ணனுடன் சிவசுவின் பேட்டி)
உரிமை: ஆசிரியர்க்கு

டிசம்பர் 1980

விலை ரூ. 3—00

முகப்பு அட்டை ஓவியம்
பிருந்த் (A. J. கணேஷ்)

அச்சகம்: ரெக்ஸி, நெல்லை-1.

வெளியிட்டவர்: எஸ். விஜயலட்சுமி, 9, ரயில்வே ஸ்டேஷன் ரோட், பாளையங்கோட்டை-627 002.

# ஏன்?

வல்லிக்கண்ணனுக்கு அறுபது வயது நிறைவில், அவரைப் பாராட்ட நெல்லை முற்போக்கு எழுத்தாள நண்பர்களும் கலை இலக்கியப் பெருமன்ற நண்பர்களும் கூடினர். அவருடைய ஒரு நாவலைப் படித்து பேசச் சென்ற நான், அவரிடம் சில ஆதாரபூர்வமான கேள்விகளையும் கேட்டேன். சட்டென்று அவர்களும் பதில் தந்தார்கள்.

படைப்பாளி வரலாறு, பின் வருகிற சந்ததியினருக்கு கற்பனைப் படிவமாக திகழ்வதைத்

தவிர்க்கும் முயற்சி படைப்பாளியின் படைப்புக்களை அணுகுவதற்கு பொத்தம் பொதுவாக, இலக்கியப் பிரிவுகளை, அதன் செயல்பாடுகளைப் பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளனர் என்பதும் அறிந்தால் நல்லது. அதுக்கும் இது ஒரு முயற்சி.

நிதர்சனமாக, இலக்கியப் படைப்பாளிகளின் பேட்டி வருவதற்கும் இது முன்னோடி.

*சிவ்சு.*

சிவசு:

பிறந்த ஊர் பற்றி கூறுங்களேன்.

வ.சு:

எனது சொந்த ஊர் ராஜவல்லிபுரம். ஆயினும் நான் பிறந்த இடம் நாங்குனேரி தாலுகாவில் உள்ள திசையன்விளை.

அப்பா எக்சைஸ் சப் இன்ஸ்பெக்டர் ஆக வேலை பார்த்ததால் ஊர் விட்டு ஊர் மாறுதல் அடிக்கடி நேர்ந்தது.

திசையன்விளைக்குப் பிறகு தூத்துக்குடியில் எனது முதல் வருடம் கழிந்தது. அடுத்து ஓட்டப்பிடாரத்தில் ஒன்றரை வருஷம். பிறகு கோவில்பட்டியில் ஒன்றரை வருஷம்.

படிப்பது, எழுதுவது, ஊர் சுற்றுவது தான் என் வாழ்க்கை என்று நான் அடிக்கடி குறிப்பிட்டு வருகிறேன். அதில் 'ஊர் சுற்றுதல்' என்பது என் பிறப்புடனே ஆரம்பித்து விட்டது என்று கொள்ளலாம். வயல்களில் பச்சை பசேலென நெல் பயிரும், குளத்தில் நீரும் நிறைந்திருக்கையில் ராஜவல்லிபுரம் சூழ்நிலை மிக அழகாக இருக்கும். வறண்ட கோடைக் காலத்தில் சூழ்நிலை வெறுமை கண்களை உறுத்தும்.

ஊருக்குத் தெற்கே ஒரு மைல் தள்ளி தாமிரவர்ணி ஆறு அழகிய சூழ்நிலையில் தவழ்ந்து செல்கிறது. ஆனால் அந்த அழகை ரசிக்கக்கூடிய மனம் பெற்றவர்கள் இவ்வூரில் இல்லை

செப்பறை என்ற நடராஜர் ஸ்தலம் ஆற்றை ஒட்டி அமைந்துள்ளது. சிதம்பரத்துக்கு அடுத்த திருத்தலம் என்றும் இல்லையில்லை சிதம்பரம் மாதிரியேதான்

இதுவும் என்றும் பெருமைப்பட்டுக் கொள்வது இவ் வூர்காரர்களின் இயல்பு ஆக இருந்து வருகிறது.

ஜெ சு:

வயது — பிறந்த வருடம் — மாதம்—தேதி சொல்லுங் களேன்.

வ:க:

நவம்பர் 12, 1920 தமிழில் ஐப்பசி மாதம், ஏதோ ஒரு வெள்ளிக்கிழமை நட்சத்திரம் அனுஷம்.

சிவசு:

பெற்ருேர் விவரம் தர இயலுமா?

வ.க:

ராஜவல்லிபுரம் முத்தையாபிள்ளையின் மூன்ருவது மகன் சுப்பிரமணிய பிள்ளை—தகப்பஞர்.
தாய்—மகமாயி அம்மாள். தெற்குக் கார்சேரியைச் சேர்ந்தவள்.

ராஜவல்லிபுரம் சைவ வேளாளர்களில் கார்காத்தார் என்ற இனத்தினரின் முக்கிய வாசஸ்தலமாக இருந் தது. முத்தையா பிள்ளையின் குடும்பம் பெரியது. என் அப்பா கூடப் பிறந்தவர்கள் ஆறு ஆண்களும் மூன்று பெண்களும் ஆவர். பெண்களுக்கு கல்யாணம்பண்ணி, வாழ்க்கை வசதி செய்து கொடுக்கவும் மகன்கள் ஒவ் வொருவருக்கும் அரைக்கோட்டை விரைப்பாடும், ஒரு வீடும் அல்லது வீடு கட்டிக் கொள்வதற்கு ஏற்ற காலி மனையும் பாகம் பிரித்து கொடுக்கும் அளவுக்கு தாத்தா முத்தையா பிள்ளை சொத்து உடையவராக இருந்து இருக்கிருர்.

அப்பா திருநெல்வேலி ஹிந்து ஹைஸ்கூலில் கல்வி கற்று பிறகு உத்தியோகம் தேடிக்கொண்டார்கள். உயரமாய் எடுப்பான தோற்றமும் பெற்றிருந்த அப் பாவுக்கு 'இன்ஸ்பெக்டர்பிள்ளை' என்றமதிப்பும் போன ஊர்களில் எல்லாம் செல்வாக்கும் இருந்தது. சாதா

ரண ஜனங்கள் பயப்படும்படி அதிகாரம் வகித்தார்கள். அந்த காலத்திய சூழ்நிலை அப்படி.

அப்பா வேலை பார்த்த காலத்திலேயே நாவலாசிரியரான பெருங்குளம் அ. மாதவய்யாவும் எக்சைஸ் சப் இன்ஸ்பெக்டராகப் பணிபுரிந்து இருக்கிறார் அவரை பற்றி, அவர் கதை எழுதுவது பற்றி அப்பா அந்தக் காலத்தில் சொல்லியிருக்கிறார்கள். மாதவய்யாவின் புத்தகங்கள் சிலவும், அவர் நடத்திய 'பஞ்சாமிர்தம்' பத்திரிகையின் ஒன்றிரு இதழ்களும் 1930 க்கு முன்பு எங்கள் வீட்டில் கிடந்தன. அழிந்துபோயின.

அப்பாவுக்கு ஆஸ்துமா வியாதி உண்டு. 54 வயதில் இறந்து போனார்கள் பாளையங்கோட்டையில் வைத்து. அப்போது எனக்கு 10 வயது. 'First Form' (ஆறும் வகுப்பு) படித்துக் கொண்டு இருந்தேன்.

சிவசு:

உடன் பிறந்தவர்கள் பற்றி கூறுங்கள்.

வ.க:

என் அப்பாவின் முதல் தாரமான கலியாணி அம்மாள் குழந்தை இல்லாமலேயே செத்துப்போனாள்.

இரண்டாவது தாரமான கிடாரக்குளம் சண்முகவடிவு அம்மாள் ஒரு ஆண் குழந்தையை பிரசவித்து விட்டு இறந்தாள். அதுதான் கல்யாணசுந்தரம் என் பெரிய அண்ணாச்சி.

மூன்றும் தாரமான தெற்குக் கார்சேரி மகமாயி அம்மாளுக்கு மூன்று மகன்கள். 1. கோமதிநாயகம், 2. கிருஷ்ண ஸ்வாமி 3. முருகேசன்.

அண்ணாச்சி கல்யாணசுந்தரம் கல்யாணம் செய்து கொண்டு ஊரிலேயே விவசாயத்தை கவனித்துக் கொண்டு இருந்தார். அவருக்கு ஒரே மகள் சண்முக வடிவு. அவளுக்கு கல்யாணமாகி நாலு பையன்கள் இருக்கிறார்கள்.

இரண்டாவது அண்ணுச்சி கோமதிநாயகம் சென்னையில் எபிஷியன் பப்ளிஸிட்டீஸ் பி. லிமிடெட் கம்பெனியில் மானேஜராக இருக்கிறார். அப்படி வருவதற்கு முன்பு மெடிகல் ஸ்டோர், அச்சாபீஸ், 'சினிமா உலகம்' பத்திரிகை துணை ஆசிரியர் என்று அநேக வேலைகள் பார்த்திருக்கிறார். அசோகன் என்ற புனை பெயரில் கதைகள் எழுதி இருக்கிறார். உலகத்து சிறுகதைகள் பலவற்றை மொழி பெயர்த்துள்ளார். மாக்சிம் கார்க்கியின் 'Lower Depths' நாடகம் அசோகன் தமிழாக்கமாக 'அதல பாதாளம்' என்று புத்தகமாக வந்தது. இப்போது 62 வயது முடிந்து 63 வயது நடக்கிறது அவருக்கு. 4 பெண்கள் 2 பையன்கள் இருக்கிறார்கள்

தம்பி முருகேசன் டி. பி. நோய் கண்டு 22-ம் வயதில் இறந்து போனான் 1954-ல்.

பெரிய அண்ணுச்சி 1974-ல் இறந்து போனார். அதுக்கு முந்திய வருடம் (1973ல்) அம்மா இறந்தாள். என் பெயர் கிருஷ்ணஸ்வாமி எனபது பள்ளிக்கூடத்தில் சேர்க்கும்போது வந்தது. அதுக்கு முந்தி கோபாலகிருஷ்ணன் என்று தான் பெயர் பெரியப்பா பெயர் அது. இப்போது கூட பத்திரங்கள் பட்டாக்களை பொறுத்தவரை என் பெயர் அதுதான். அம்மா என்னை 'சொக்கையா' என்றே அழைத்து வந்தாள். வல்லிக்கண்ணன் என்பது (ராஜவல்லிபுரம் கிருஷ்ணஸ்வாமி என்பதை குறிப்பது) 1940-ல் நானாக வைத்து கொண்டது.

சிவசு:

பள்ளிப் படிப்பு பற்றிய தகவல்களை தாருங்களேன்

வ.க:

அந்தக் காலத்து வழக்கப்படி சரஸ்வதி பூஜைக்கு மறுநாள் உரிய முறைப்படி திருவிழா தடபுடலோடு எனக்கு 'வித்யா ஆரம்பம்' செய்து வைக்கப்பட்டது. எனது 4 வது வயசின் இறுதியில். கோவில்பட்டியில் திண்ணை

பள்ளிக்கூட அண்ணாவி ஒருவர் 'அட்சரப்பியாசம்' செய்து வைத்தார் அவர் பெயரை அறிந்து கொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது

1925–ல் கோவில்பட்டியில் பெரிய பள்ளிக்கூடம் ஒன்றில் முதல் வகுப்பு படித்தேன்.

1926, 27–ல் பெருங்குளம் எலிமெண்டரி ஸ்கூலில் 2–வது 3-வது படித்தேன்,

1928–ல் திருநெல்வேலி மந்திர மூர்த்தி ஹைஸ்கூலில் 4–வது வகுப்பு,

1929-ல் பாளையங்கோட்டை சேர்ந்தோம். 5-வது வகுப்பிலிருந்து செயின்ட் சேவியர்ஸ் ஹைஸ்கூலில் பயின்றேன்.

1936 மார்ச்சு மாதம் எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதி முடித்த பிறகு ராஜவல்லிபுரம் அடைந்தோம்.

சேவியர்ஸ் ஹைஸ்கூலில் படித்தபோது ஒவ்வொரு வருடமும் Good Conduct பரிசு எனக்கே அளிக்கப் பட்டு வந்தது.

ஹைஸ்கூல் வகுப்புகளில் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் முதலாவது அல்லது இரண்டாவது பரிசு தவருது எனக்கு கிடைத்து வந்தது.

1936 ஏப்ரல் முதல் 1937 அக்டோபர்முடிய ராஜவல்லிபுரம் வாசம். அதுதான் முதன் முதலாக நான் ஊரோடு நெடுநாள் தங்கிய கால கட்டமாகும்

அதன் பிறகு 1972-73 ல் இரண்டு வருடங்கள் சேர்ந்தாற்போல் தங்க நேரிட்டது. மற்றபடி இதர காலங்களில் 2 மாதம் 3 மாதம் அதிகம் போனல் 6 மாதங்கள் என்றுதான் ராஜவல்லிபுரம் வாசம் எனக்கு சித்தித்துள்ளது.

சிவசு:

கதை எழுத வேண்டும் என்ற உந்துதல் (urge) எப்போது ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது?

வ.க:

கதைகள் நிறைந்த சூழலிலேயே நான் வந்தது கதைகளில் எனக்கு ஒரு இயல்பான ஈடுபாட்டை வளர்த்துவிட்டது.என் அம்மா மீஞராசன் மகனுக்கு பொன் உண்டோ? போன்ற நாட்டுப்புற கதைகளையும் பேய் பிசாசு கதைகளையும் சொல்வது வழக்கம். அப்பா பல ரகமான கதைகளையும் சொந்த அனுபவங்களையும் சுவ ராஸ்யமாக சொல்வது உண்டு. அப்பாவின் சேவகர்களில் ஒரு நாயுடு மந்திர தந்திர கதைகள் புராணக் கதைகளை எல்லாம் சொல்லுவார். 4–ம் வகுப்பு வாத்தியார் ராமசாமி பிள்ளை, கஸபீயான்கா கதை, பிலிப் ஸிட்னி கதை போன்ற லட்சிய மாந்தரின் கதைகளை சொல்லி வந்தார். பிறகு புத்தகங்கள் விதம் விதமான கதைகள் சொல்லின.

2-வது பாரம் (ஏழாம் வகுப்பு) படிக்கையிலேயே இது போல் எல்லாம் கதைகள் சொல்ல வேண்டும் என்ற ஆசை என்னுள் வளரலாயிற்று.

1933 முதல் 'ஆனந்த விகடன்' பத்திரிகை படிக்கக் கிடைத்தது. வடுவூர் துரைசாமி அய்யங்கார், ஜே. ஆர். ரங்கராஜு நாவல்கள் என் உள்ளத்தில் கதைத்தினவை தூண்டி வந்தன. 1935–36 களில் 'கல்கி'யின் சுவையான கதைகள் பல பிறந்தன. விகடனில் நல்ல கதைகள் வந்து கொண்டு இருந்தன. இவை எல்லாம் நானும் கதை எழுத வேண்டும் என்ற அரிப்பை வளர்த்து வந்தன.

1936–37 ல் வீட்டில் சும்மா இருந்தபோது நான் கதைகள் எழுதலானேன். 'இதய ஒலி' என்று கையெழுத்துப் பத்திரிகை தொடங்கினேன்.

1937 ல் 'மணிக் கொடி' வால்யூம்கள் படிக்கக்கிடைத்தன. அவற்றில் இருந்த புதுமைப்பித்தன் கதைகள் என்னை மிகுதியும் வசீகரித்தன. அதுபோன்ற கதைகளை எழுத வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

1939 முதல் தீவிரமாக எழுதத் தொடங்கினேன். அப்போதுதான் பத்திரிகைகளுக்கும் என் எழுத்துக்களை அனுப்ப ஆரம்பித்தேன்.

சிவசு:

நீங்கள் முதன் முதலில் எழுதி எதில் வெளி வந்தது? அது பற்றி என்ன உணர்ந்தீர்கள்?

வ க:

எனது முதல் கதை 'சந்திரகாந்தக்கல்' பிரசண்ட விகடன்' இதழில் (ஆசிரியர்: நாரணதுரைக்கண்ணன்) வெளியாயிற்று. அதீதமான கற்பனை கதை.

சந்திரகாந்தக் கல்லுக்கு (Moon Stone) ஒரு இயல்பு உண்டு. பவுர்ணமி இரவில் அதில் நீர் கசியும் என்ற பழங்கால நம்பிக்கையை அடிப்படையாக கொண்ட ஒரு கதை. அதை அனுப்பி ஏழு எட்டு மாதங்களுக்குப் பிறகு அது வெளிவராது என்று எண்ணியிருந்த வேளையில்—வந்தது. அதனுல் அது அவ்வளவாக உளக்கிளர்ச்சி ஏற்படுத்தி விடவில்லை.

ஆனுல் 1939 லேயே ஆனந்த விகடனில் 'புன்னகையும் புது நிலவும்' என்ற கதை பிரசுரமாகி அதுக்கு 13 ரூபாய் எட்டணுவுக்கு ஒரு செக் வந்தபோது ஏற்பட்ட உளச் சிலிர்ப்பு விசேஷமானது தான். அச்சில் வந்த கதையை பல தடவைகள் படித்து மகிழ்ந்தேன் அதே மாதிரி 'கலைமகள்' இதழுக்கு அனுப்பிய 'லட்சிய சிதைவு' என்ற கதை மறு மாதமே பிரசுரமாகி வால்போஸ்டரிலும் கதையின் பெயரும் என் பெயரும் அச்சாகி வந்தபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி அதிகம்தான். 1941—ல் நிகழ்ந்தது.

சிவசு:

வேலையில் சேர்ந்ததிலிருந்து வாழ்க்கை வரலாறு எப்படி?

வ. க:

1937 நவம்பர் மாதம் ராமநாதபுரம் ஜில்லா பரமக்குடிக் குப் போய் அங்கு புதுசாகத் திறக்கப்பட்டிருந்த அக்ரி கல்சுரல் டிமான்ஸ்ட்ரேட்டர் ஆபீசில் குமாஸ்தா வேலே ஒப்புக்கொண்டேன். 1939 அக்டோபர் வரை அவ்வூரில் இருந்தேன்.

அது எனது இயல்புகளுக்கு ஏற்ற அருமையான சூழ் நிலேயாக அமைந்திருந்தது. வேலேயே கிடையாது. ஆபீசர் என்று வருகிறவர் எவ்வளவு காலம் சம்பளத் துடன் லீவு எடுக்க முடியுமோ அவ்வளவு லீவுகளேயும் அனுபவிக்கும் இயல்புடையராக இருந்தார். Casual leave leave with pay, leave, on medical certificate, leave on average pay என்று பெரும்பாலும் அவர் லீவிலேயே போய் விடுவார். அதனுல் நான் தனியாக இருந்து படிக்கவும் எழுதவும் எனக்கு ரொம்ப சவுகரிய மாக இருந்தது.

அந்நாட்களில் 'லோக சக்தி' 'பாரத சக்தி' என்று 2 பத்திரிகைகள். இளேஞருக்கு உணர்வூட்டும் எழுத் துக்கள் தாங்கியவை. அதில் 'பொறி பறக்கும்' உணர்ச்சி எழுத்துக்களாலான கட்டுரைகளே இதழ் தோறும் நான் எழுதி வந்தேன். எழுச்சிக் கவிதை களும் கூட. சர்க்கார் ஆபீசில் அலுவல் புரியும் ஒருவன் அப்படிப்பட்ட வேக எழுத்துக்கள் எழுதியது பத்திரிகை ஆசிரியர்களுக்கே வியப்பு தந்தது. அப்போதுதான் 'வல்லிக்கண்ணன்' என்ற புனேபெயரை நான் வைத் துக்கொண்டேன்.

1939 கடைசியில், திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண் டத்துக்கு மாறுதலாகி வந்தேன். அங்கு டிமான்ஸ்ட் ரேட்டர் ஆக இருந்த J. S. C. அந்தோணிப் பிள்ளே மட்டமான மனிதன். தன் கீழ் வேலே பார்க்கிறவர் களுக்கு தொல்லே கொடுத்து, சீட்டுக் கிழிப்பதில் உற் சாகமுடைய ஆசாமி நான் கதை—கட்டுரைகள் எழுது

வது பற்றி மேல் அதிகாரிக்கு எழுதி, தொல்லைகள் விளைவித்தார். எழுத்தாளனாக வளர வேண்டும், பத்திரிகை உலகில் பிரவேசிக்க வேண்டும் என்ற ஆசை என்னை வெறியாகப் பற்றியிருந்ததால், 1941 ஜூனில் என் வேலையை ராஜிநாமா செய்தேன் திருநெல்வேலியில் அரசாடிப் பாலத்தெருவில் குடி புகுந்தோம்.

சிவசு:

பத்திரிகை உலகில் புகுந்த வரலாறு ………………

வ.க:

அந்த சந்தர்ப்பத்தில் அண்ணா கோமதிநாயகம் திருநெல்வேலி மெடிகல் ஸ்டோர்ஸில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்.

கல்யாணசுந்தரம் முனிசிபல் பஸ் ஸ்டாண்டில் பில் கலெக்டராகப் பணியாற்றி வந்தார்.

தம்பி முருகேசன் சும்மா இருந்தான். இருந்த வேலையை விட்டுவிட்டு நானும் வீணாக வாழத் துணிந்தது பெரியவர்களின் முணு முணுப்பையும் அம்மாவின் நிரந் தர ஏச்சுக்களையும் பெற்றுத் தந்தது.

நான் படிப்பதிலும் எழுதுவதிலும் மும்முரமாக ஈடுபட் டிருந்தேன். 'கலைமகள்' இதழ்களில் அடிக்கடி என் கதை பிரசுரம் பெற்றது எனக்கு உற்சாகம் தந்தது. 'நவசக்தி' 'கலாமோகினி' போன்ற இலக்கிய இதழ் கள் உற்சாகமூட்டின. செட்டிநாடு என்ற ஊரிலிருந்து வந்த 'இந்திரா' – பிறகு காரைக்குடிக்கு வந்தது– நடத்திய சிறுகதைப் போட்டியில் எனது 'தெருக் கூத்து' என்ற கதை (கழைக்கூத்தாடியின் அவலப் பிழைப்பு பற்றியது) முதல் பரிசு பெற்றது. 1941 இறுதியில்.

வல்லிக்கண்ணன் என்ற பெயர் பத்திரிகை உலகம் அறிந்த பெயர் ஆயிற்று

மேலும் வளர்ச்சி பெறுவதற்கு சென்னை சேர்வது நல்லது என்ற எண்ணம் எழுந்தது வீட்டில் அம்மாவின் குறை கூறுதலும் முணு முணுப்புகளும் அதிகரித்தன.

ஆகவே, 1942 மே மாதம் ஒரு நாள் அதிகாலையில் நான் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல், திருநெல்வேலி டவுணிலிருந்து நடந்தே கிளம்பினேன் காசும் எடுத்துக்கொள்ளாமல், முதல் நாள் 35 மைல் நடந்து, கோவில்பட்டி அடைந்து, இரவில் ஸ்டேஷனில் தூங்கினேன். 2-ம் நாள் 30 மைல் நடந்தேன் இரவில் விருதுநகரை தாண்டினேன். ரோட்டடியில் ஒரு புளிய மரத்தடியில் படுத்து உறங்கினேன் அதிகாலையில் எழுந்து நடந்து 3-ம் நாள் பகல் 12 மணிக்கு மதுரை சேர்ந்தேன். கையில் எடுத்துச் சென்ற சிறிது அவல் அவல்தான் உணவு. வழியில் கிடைத்த தண்ணீரும். அது ஒரு வெறி. ஆலிவர் கோல்ட்ஸ்மித், கையில் காசில்லாமல், ஐரோப்பா பூரா சுற்றினன். மாக்சிம் கார்க்கி ரஷ்யா நெடுகிலும் நடந்தான் பெனிடோ முசோலினி காசுகள் இல்லாமலே வீட்டை விட்டு வெளியேறினன். நானும் ஏன் போகக்கூடாது என்று மனம் கேட்டுக்கொண்டிருந்த காலம்.

மதுரையில் வேலை பார்த்து வசித்த ஒருவரிடம் 3ரூபாய் பெற்றுக்கொண்டு, காரைக்குடி போனேன். 'சக்தி', யுத்த கால நடவடிக்கையாக, சென்னையிலிருந்து காரைக்குடி வந்திருந்தது. 'இந்திரா'வில் ப. நீலகண்டன் (பிற்காலத்திய சினிமா உலகம் புகழ் ஆசாமி) ஆசிரியர் ஆர். சண்முகசுந்தரம் காரைக்குடி வந்திருந்தார் 'சக்தி'யில் வேலை கிடைக்குமா பார்க்கலாம் என்று ஆர். சண்முகசுந்தரம் என்னை அழைத்துப்

போனுர். தி. ஜ. ர. அறிமுகம் கிடைத்தது. வேலை எதுவும் கிடைக்கவில்லை.

இதுக்குள் என் அண்ணு கோமதிநாயகம் பலருக்கும் கடிதம் எழுதி, நான் காரைக்குடியில் இருப்பதை அறிந்து பணம் அனுப்பி, 'சென்னை போவதானுல் ரயிலில் போ. வீடு திரும்ப விரும்பினுல், திரும்பி வா' என்று எழுதினுர்.

நான் திருநெல்வேலிக்கே திரும்பி விட்டேன்.

பிறகு 'கலாமோகினி' ஆசிரியர் வி. ரா. ரா. முயன்று, 'திருமகள்' பத்திரிகையில் எனக்கு உதவி ஆசிரியர் வேலை வாங்கித் தந்தார். 1943 பிப்ரவரியில் 'திருமகள்' என்ற சாதாரணப் பத்திரிகையை 'கலாமோகினி' மாதிரி மறுமலர்ச்சி இலக்கிய இதழாக மாற்ற வேண்டும் என்ற ஆசை அதன் அதிபருக்கு இருந்தது ஆனுல் வசதி இல்லை. எனவே, ஒரே ஒரு மாதம் 'திருமகள்' ஆபீசில் வேலை பார்த்துவிட்டு, நான் கோயம்புத்தூர் சேர்ந்தேன். 'சினிமா உலகம்' மாதம் இருமுறைப் பத்திரிகையின் துணை ஆசிரியராக. ஆசிரியர் பி. எஸ். செட்டியார் அழைப்பினை ஏற்று அங்கும் என் இலக்கிய வளர்ச்சிக்கு வேண்டிய வசதிகள் கிட்டாததால், 1943 டிசம்பரில் சென்னை சேர்ந்தேன். நண்பர் சக்திதாசன் சுப்பிரமணியன் நடத்திய 'நவசக்தி' மாசிகையில் உதவி ஆசிரியராக அது அப்போது 'முற்போக்கு இலக்கிய ஏடு' ஆக நடந்து கொண்டிருந்தது கே. ராமநாதன் (கம்யூனிஸ்ட்) அதன் துணை ஆசிரியராக இருந்தார்.

பணபலம் இல்லாததனுலும், பத்திரிகை ஒழுங்காக வராததனுலும், திருச்சி 'கிராம ஊழியன்' ஆசிரியர் திருலோக சீதாராமும், நிர்வாகி அ வெ ர. கிருஷ்ணசாமி ரெட்டியாரும் விரும்பி விரும்பி அழைத்துக் கொண்டிருந்ததனுலும், நான் துறையூர் வந்து 'கிராம

ஊழியன்' மாதம் இருமுறையில் சேர்ந்தேன். 1944 பிப்ரவரி கடைசியில், கு. ப. ராஜகோபாலன் அதன் ஆசிரியராக இருந்தார். கும்பகோணத்தில் இருந்து கொண்டே விஷயங்கள் அனுப்பி வந்தார்.

நான் சேர்ந்து ஒரு மாதம் ஆனதும், கு. ப ரா. இறந்து போனுர். பத்திரிகையின் வளர்ச்சிக்கு நான் தீவிரமாக உழைத்தேன், துணை ஆசிரியராக. ஒரு வருஷத்தில் திருலோக சீதாராம் விலகிக்கொண்டு, திருச்சி போய் 'சிவாஜி' ஆசிரியர் ஆனுர். நான் 'கிராம ஊழியன்' ஆசிரியராக உழைத்தேன். 'கி. ஊ.' என் வளர்ச்சிக்குத் துணை புரிந்தது.

நான்கு வருடங்கள் அங்கு பணியாற்றினேன்.

பத்திரிகை நடத்தி ஆயுசு முழுவதும் பெற இயலாத பெரும் லாபத்தை அச்சு இயந்திரங்களை விற்பதன் மூலம் சுலபமாகப் பெற்று விட முடியும் என்று உணர்ந்த நிர்வாகி ரெட்டியார் அப்படியே செய்தார். பணம் சம்பாதித்தார் பத்திரிகையை நிறுத்திவிட்டார் 1947 மே மாதத்தில்.

நான் அந்நாட்களில் விறு விறுப்பான சிறு புத்தகங்கள் எழுதி, நானே பிரசுரித்து வந்தேன். "கோயில்களை மூடுங்கள்" —கோரநாதன். சினிமாவில் கடவுள்கள்' —கோரநாதன். 'அடியுங்கள் சாவுமணி!'—மிவாஸ்கி. 'குஞ்சாலாடு'—நையாண்டி பாரதி. இவை சில சுடச் சுட விற்பனை ஆயின. ஆயிரம் ரூபாய் முதல் இருந் திருந்தால், பதிப்பகத்தை நிலைநிறுத்தி நல்ல வெளியீடு களை கொண்டுவந்திருக்க முடியும். 'கையில் காசும் இல்லை; கடன் கொடுப்பார் யாரும் இல்லை'. 1947 ஆகஸ்டில் சுதந்திரம் கிடைத்த சமயம், நான் துறை யூரில்தான் இருந்தேன். 1947 செப்டம்பர் கடைசியில் சென்னை சேர்ந்தேன். 'சினிமா உலகம்' பத்திரிகை

சென்னையில் இயங்கிக் கொண்டிருந்தது என் அண்ணா கோமதி நாயகம் (அசோகன்) அதன் துணை ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார்.

சிவ சு:

ஏன் திருமணம் செய்துகொள்ளவில்லை? இலக்கியத்துக்கு சேவை செய்ய எண்ணியா? அல்லது தனிப்பட்ட காரணம் ஏதேனுமா?

வ.க:

பல காரணங்கள். முக்கியமான முதலாவது காரணம்: பொருளாதார வறட்சி அப்பா இறந்த பிறகு, குடும்பப் பொருளாதாரம் மிகவும் சரிந்து, வறுமை நிலையே தொடர்ந்தது பொருளாதார வசதி திருப்திகரமாக இருந்தால்தான், இல்லற வாழ்வும் சந்தோஷம் நிரம்பியதாக அமையும் இல்லையெனில், பலவித சிக்கல்களும், தகராறுகளும், அமைதியின்மையும் தொடர்ந்து கொண்டேயிருக்கும்

நான் சந்தோஷமாக வாழ விரும்பினேன். அதுக்காக எனக்கு என்று ஒரு வாழ்க்கை முறையை தேர்ந்து கொண்டேன். அது சீரான, திட்டமான, நிரந்தரமான வருமானம் தரக்கூடியது அல்ல. ஆனால், தனி நபருடைய சந்தோஷம் என்பது பணத்தை நம்பி இருப்பது இல்லை. அது வாழ்க்கைத் துணை என்று வரக்கூடிய பெண்ணுக்குப் புரியாது ; பிடிக்கவும் செய்யாது.

பெண்களைப் பற்றி எனக்கு எப்பவுமே நல்ல அபிப்பிராயம் கிடையாது அதிலும், சைவ வேளாளர் இன மத்தியதர வர்க்கத்துப் பெண்கள் — அதிலும், காப்பாத்த வேளாள குல திலகங்கள் — பற்றி. இவர்கள் மனோ விசாலம் பெறாத, குறுகிய நோக்குடைய, தன்னல நாட்டம் மிகுதியாக உடையவர்கள். 'வாழ்க்கைத்

துணை' ஆக விளங்குவதற்கு மாறாக கழுத்தறுப்பு ஆகக் கூடியவர்கள். இதனாலேயே, மனைவி என்பவள் ஒருவனைப் பற்றுகிற தீராத நோய்; அவனது வாழ்க்கை பூராவும் தொல்லை தரக்கூடிய கடுமையான வியாதி என்று நான் எழுதியிருக்கிறேன்.

கணவனிடம் உள்ளூர வெறுப்பை வளர்க்கிறவள் மத்தியதர வர்க்கத்து மனைவி. மரியாதை காட்டுவது போல் நடந்துகொண்டாலும், நெருக்கடி நேர்கிற போது, 'அவன்' 'இவன்' என்று பேசக்கூடியவள். கணவன் செத்த பிறகு, கஷ்ட காலத்தில் 'இருந்தும் கெடுத்தான், பாவிமட்டை செத்தும் கெடுத்தான்' என்று புருஷனை ஏசிப் புலம்புகிற பத்தினிகளை நான் பார்த்திருக்கிறேன். அவளை சேர்ந்தவர்களும் பழிப் பார்கள்.

அப்படி எவரும், நான் செத்ததுக்குப் பிறகு கூட என்னை குறை கூறக்கூடிய பழிக்கு இடம் கொடுக்க லாகாது என நான் உறுதிபூண்டேன்.

சிலர் இயல்பாகவே துறவு உள்ளம் கொண்டவர்கள். அப்படிப்பட்ட இயல்பு என்னுடையதாக இருக்கலாம். எனது 17 — 19 வயதுகளில் ராமகிருஷ்ணர், விவேகானந்தர், ராமதீர்த்தர், சிவானந்தா ஆகிய 'சுவாமிஜீ' களின் நூல்களே எனக்கு மிகுதியும் படிக்கக் கிடைத்தன. அவை என் உள்ளத்தை வெகுவாகப் பாதித்தன என்றே சொல்லவேண்டும். நான் பிரமச் சாரியாக வாழ்வது என்று தீர்மானித்ததுக்கு இதுவும் ஒரு காரணமே.

பொறுப்புகள் இல்லாமல் வாழ்வதே எனக்குப்பிடிக்கும். கல்யாணம், மனைவி, குடும்பம் முதலியன பொறுப்பு களை அதிகம் சுமத்துகிற பிணைப்புகள். எனவே, அவற்றிலிருந்து ஒதுங்கினேன்.

ஆகவே, நான் சுத்த சுயம்பிரகாசச் சுயநலம் காரண மாகத்தான் திருமணம் செய்து கொள்ளவில்லை.

இலக்கிய சேவைக்காகத் தான் நான் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்று நான் சொன்னால், அது என்னை நானே ஏமாற்றிக்கொள்வதாகும்.

சிவசு:

நீங்கள் பிறந்து வாழ்ந்து பழகிய இந்த சிற்றூர்களை நேசித்து, எந்த அளவில் உங்கள் படைப்புக்களில் அவற்றை தவழ விட்டுள்ளீர்கள் ?

வ.க:

புதுமைப் பித்தன் மாதிரி பரந்த அளவுக்கு நெல்லை மாவட்ட ஊர்களையும் இடங்களையும் நான் கதைகளில் இடம்பெறச் செய்யவில்லை.

ஆயினும், ராஜவல்லிபுரம், அதன் சுற்றுப்புறங்கள் என் சிறு கதைகளில் நிறைய இடம் பெற்றுள்ளன. சிவபுரம் என்று ஊர்ப் பெயர் வரும்.

இந்த வட்டாரத்து விந்தை மனிதர்கள் என் கதைகளில் நிறையவே வருகிறார்கள்

'நினைவுச் சரம்' என்ற நாவல் இவ்வூர், அதன் சுற்றுப் புறங்கள், பாளையங்கோட்டை — திருநெல்வேலி வட்டாரங்களில் கடந்த ஐம்பது வருடங்களில் நிகழ்ந் துள்ள பல்வேறு மாறுதல்களையும் சுவையாக விவரிக்கிறது.

சிவசு:

வெளிவந்த புத்தகங்கள்...........

வ.க:

சிறு கதைகள் :

1. கல்யாணி 1944 கோவையில் ஒரு தனி நபர்

2. நாட்டியக்காரி 1944 கவிக்குயில் நிலையம்
நாகர்கோவில்

3. வல்லிக்கண்ணன் கதைகள் 1952 கயிலைப் பதிப்பகம், சென்னை

4. ஆண் சிங்கம் 1966 எழுத்துப் பிரசுரம், சென்னை

5 வாழ விரும்பியவன் — மக்கள் வெளியீடு, சென்னை

நாவல் :

1 தேவி மல்லிகா 1946 சினிமா நிலையம் வெளியீடு, பெங்களூர்

2. வசந்தம் மலர்ந்தது கலைஞன் பதிப்பகம், சென்னை

3 விடிவெள்ளி இமயப் பதிப்பகம், நாகப்பட்டினம்

4. அன்னக்கிளி இமயப்பதிப்பகம், நாகப்பட்டினம்

5. வீடும் வெளியும் காவேரி பதிப்பகம், சென்னை.

6 சகுந்தலா நாதன்ஸ் வெளியீடு, சென்னை.

7 நினைவுச்சரம் 1979 பூம்புகார் பிரசுரம் சென்னை.

8. அலைமோதும் கடல் ஓரத்தில் ஒரு அப்பாவி மனிதன் 1979 பூம்புகார் பிரசுரம், சென்னை.

நாடகம் :

விடியுமா? 1950 எம். சூரி, சென்னை.

வரலாறு :

நம் நேரு சென்னை.

விஜயலட்சுமி பண்டிட் ,,

கட்டுரை :

1. (பாரதிதாசன்) உவமைநயம் 1946 கமலா பிரசுரம், சென்னை

2. முத்துக் குளிப்பு கலைஞன் பதிப்பகம்.

3. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் 1977 எழுத்துப்பிரசுரம், சென்னை.
புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்
இரண்டாம் பதிப்பு 1980 அகரம். சிவகங்கை.

4. பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை.

5. காலத்தின் குரல்.

கவிதை :

அமரவேதனை 1974 எழுத்துப்பிரசுரம் சென்னை.

மொழிபெயர்ப்பு :

1. டால்ஸ்டாய் கதைகள் அலைடு பப்ளிகேஷன்ஸ் சென்னை.

2. கடலில் நடந்தது — கார்க்கி கதைகள் வெண்புறா வெளியீடு, சென்னை.

3. சின்னஞ்சிறு பெண் — கார்க்கி கதைகள் நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ், திருநெல்வேலி.

4. கார்க்கி கட்டுரைகள் நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ், திருநெல்வேலி.

5. தாத்தாவும் பேரனும் — ராபர்ட் ரூஆர்க் முத்துப் பிரசுரம் (Pearl Publishers) சென்னை.

சிறு பிரசுரங்கள் :

(16 பக்கம் — 32 பக்கங்களில்)

கதை : 1. ஒய்யாரி 2. குமாரி செல்வா 3. முத்தம்
4. ராதை சிரித்தாள் 5. அவள் ஒரு எக்ஸ்ட்ரா
6. ஓடிப்போனவள் கதை 7. இருளடைந்த பங்களா

நாவல் :

செவ்வானம் — கோரநாதன்
குஞ்சாலாடு — நையாண்டி பாரதி

கட்டுரை :

கோயில்களை மூடுங்கள் — கோரநாதன்
சினிமாவில் கடவுள்கள் — கோரநாதன்
எத்தர்களும் ஏமாந்தவர்களும் — கோரநாதன்.
அடியுங்கள் சாவுமணி — மிவாஸ்கி

நாடகம் :

நாசகாரக் கும்பல் — நையாண்டி பாரதி

சிவசு:

தொகுப்புக்களில் வெளிவராமல் இதழ்களில் எவை எவற்றில் வெளிவந்துள்ளன? என்னென்ன வகை?

வ. க:

கணக்கிடுவது சாத்தியமில்லை.

ஏகப்பட்ட சிறுகதைகள், நையாண்டிக் கட்டுரைகள், வசன கவிதைகள், ஓரங்க நாடகங்கள். குறுநாவல்கள் நீண்ட நாவல்கள், மொழியெர்ப்புச் சிறுகதைகள், புத்தக மதிப்புரைகள், இலக்கியப் பிரச்னைகள் பற்றிய கட்டுரைகள்.

40 வருடங்களாக — தமிழ் நாட்டின் பெரிய பத்திரிகைகள், கொளும்பு 'வீரகேசரி', கொளும்பு 'தினகரன்' சிங்கப்பூர் 'தமிழ்முரசு' ஆகியவற்றில் வந்துள்ளன. தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் இப்பவும் வந்து கொண்டிருக்கின்றன.

இவை தவிர எழுத்து வடிவத்தில் உள்ளவையும் பலப்பல பலபல.

'சினிமா உலகம்' மாதம் இருமுறை, 'கிராம ஊழியன்' மாதம் இருமுறை, 1950, 1951 (2 வருட) 'ஹனுமான்' வாரப் பத்திரிகை, 'சரஸ்வதி' இதழ்கள் — இவற்றில் உள்ள என் எழுத்துக்கள் டஜன் கணக்கில் தொகுதிகள் தயாரிக்கும் அளவுக்கு வரும்,

சொ௵. மு௵. (சொள்ளமுத்து) சிந்தனைகள், சொ௵. மு௵. குட்டிக் கதைகள், சொ௵. மு௵. ஓரங்க நாடகங்கள் — தனிரகமானவை. ஸட்டயர் நிறைந்தவை.

சிவசு:

உங்கள் ஆரம்பகால எழுத்து சூழல், அரசியல், பொருளாதார, சமூக நிலைமை எப்படி இருந்தது? நீங்களும் சக எழுத்தாளர்களும் இலக்கியத்தில் அவற்றைப் பிரதிபலித்தீர்களா?

வ. க:

அந்நாட்களில், பத்திரிகைகள் மிகவும் குறைவு. புத்தக வெளியீட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை அதை விடக் குறைவு. எழுத்தாளர்களும் இப்போது போல் மிக அதிகமான நபர்கள் இருந்ததில்லை.

எழுதுகிறவர்களுக்கு 'ஆனந்தவிகடன்' மட்டுமே பணம் தந்தது. 'கலைமகள்' பெயர் பெற்ற எழுத்தாளர்களுக்கு மட்டுமே 'சன்மானம்' அளித்தது.

எழுதுகிறவர்கள் குறைவாக இருந்ததால், தரமான எழுத்துக்களை எழுதுகிறவர்கள் ... யாராக இருந்தாலும் — பத்திரிகைகளில் தொடர்ந்து பிரசுர வாய்ப்பு பெறுவது எளிதாக இருந்தது.

இரண்டாவது மகாயுத்தம் நடந்து கொண்டிருந்த காலம், அதுக்குப் பிற்பட்ட வருடங்கள் — ஜனங்களிடம் பணப்புழக்கம் தாராளமாக இருந்தது. பணம் கொடுத்து புத்தகங்கள் வாங்கக்கூடிய தனிநபர்கள் நாட்டில் அதிகம் இருந்தார்கள். அன்றாட வாழ்க்கைச் சிரமங்கள் — பற்றுக்குறை, ரேஷன், பிளாக் மார்க்கெட் வகையரா — இருக்கவே செய்தன.

அரசியலில், தேசீய விடுதலை இயக்கம் மும்முரமாக இருந்தது காந்தீயத்தின் தாக்கம் நாடு நெடுகிலும் பரவி இருந்தது. சமூகப் பிரச்னைகள் — சாதி, தீண்டாமை, கள்குடி, விதவை மறுமணம், தாசி ஒழிப்பு போன்றவை — சீர்திருத்த நோக்கில் பிரசாரம் செய்யப்பட்டு வந்த காலம்.

இவற்றை 'கல்கி' ஓரளவுக்கு தன் எழுத்துக்களில் பிரதிபலித்திருக்கிறார். ராஜாஜி இந்நோக்கத்துடனேயே கதைகள் எழுதிக் கொண்டிருந்தார். ஆனால், 'மறுமலர்ச்சி இலக்கிய வாதிகள்' என்று சொல்லிக் கொண்ட 'மணிக்கொடி எழுத்தாளர்கள்' இவற்றுக்கு இலக்கியத்தில் இடம் தேவையில்லை என்று கருதினர். பாரதி பாடல்களில் கூட, தேசீய கீதங்கள் இலக்கியம் ஆகா என ஒதுக்கினர். நானும் 'மணிக்கொடி எழுத்தாளர்கள்' வழியையே பின்பற்றினேன்.

சிவசு:

உங்களின் ஆரம்ப காலத்திய சக எழுத்தாளர்கள் பற்றி குறிப்பிட முடியுமா?

வ.க:

'மணிக்கொடி எழுத்தாளர்கள்' எனக்கு முந்திய தலைமுறையினர் புதுமைப்பித்தனை நான் 1943-ல் முதன் முதலில் சந்தித்தேன் பிறகு பல தடவைகள்

சந்தித்துப் பேசியிருக்கிறேன். நெருங்கிய தொடர்பு இருந்ததில்லை.

கு ப. ராஜகோபாலை இரண்டே தடவைகள்தான் சந்தித்திருக்கிறேன். ந. பிச்சமூர்த்தியுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட வாய்ப்பு இருந்தது.

வ ரா. எனக்கு உற்சாகமூட்டிய பெரியார் பல தடவைகள் சந்தித்தது உண்டு

கவிஞர் ச. து சு. யோகியார் என்னிடம் பிரியம் கொண்ட நண்பரானார். கவி பாரதிதாசனை இரண்டு மூன்று தடவைகள் சந்தித்தது உண்டு.

அநேகமாக எல்லாப் பிரபல எழுத்தாளர்களையும் ஒன்றிரு முறைகள் கண்டு பேசியிருக்கிறேன். மௌனியை இதுவரை ஒரு தடவை கூடப் பார்த்தது கிடையாது. சமகால எழுத்தாளர்கள் என்று சொல்லப் போனால், ரகுநாதன் திருநெல்வேலியிலிருந்து எழுதிக் கொண்டிருந்தார். அவருடன் பழகியது உண்டு.

தி க. சிவசங்கரன், எழுத வேண்டும் என்று ஆர்வம் கொண்டு, முயன்று வந்தார். என் நண்பரானார்.

கு. அழகிரிசாமி, சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் குமாஸ்தா வேலையை துறந்துவிட்டு, பத்திரிகை உலகில் புகுந்திருந்தார். 'பிரசண்ட விகடன்' அலுவலகத்தில் எனக்கு அறிமுகமானார்.

அகிலன் அறிமுகம் புதுக்கோட்டையில் கிடைத்தது. க. நா. சுப்பிரமணியம், சி சு. செல்லப்பா ஆகியோரது பழக்கம் நான் சுயேச்சை எழுத்தாளனாக சென்னை சேர்ந்த பிறகே — 1947க்குப் பின் — கிட்டியது.

சிவசு:

இந்தியா விடுதலை எய்து முன்னும், எய்திய பின்னும் இலக்கியத்தில் ஏற்பட்ட மாறுபாடுகளை சொல்ல முடியுமா?

வ க:

விடுதலைக்கு முன்பு எழுத்தாளர்களும் பத்திரிகைகளும் ஒரு 'dedicated sprit' உடன் எழுத்து முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். தரமான இலக்கியங்களை படைக்க வேண்டும், இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளிலும் படைபபுகள் வரவேண்டும் என்ற ஆசையுடன் அவர்கள் எழுதினார்கள். உலக இலக்கியங்களின் வளமான செல்வங்களை கூடியவரை தமிழுக்குக் கொண்டு வர வேண்டும் என்று விரும்பி உழைத்தார்கள்,

பத்திரிகைகளுக்கு ஒரு லட்சியம் இருந்தது. நாட்டின் விடுதலை, சுதேசி உற்பத்திகளை ஆதரித்தல், சமூக சீர்திருத்தம் ஆகியவை அந்த லட்சியத்தின் அடிப்படைகள்

இந்தியா விடுதலை அடைந்த பிறகு — லட்சியசித்தி கிட்டிவிட்டதாக ஒரு மயக்கம் ஏற்படவும் — பத்திரிகைக்காரர்கள் குழப்ப நிலையில் இருந்தார்கள். பத்திரிகைகளை பணம் பண்ணக்கூடிய சாதனங்களாக மதிப்பவர்கள் இத்துறையில் ஈடுபட்டு, பத்திரிகைகளை வாணிப நோக்கில் வளர்க்கலாயினர். அவர்கள் நோக்கத்துக்கு ஈடு கொடுக்கக்கூடிய எழுத்தாளர்கள் தான் வெற்றி பெற முடிந்தது.

பத்திரிகைகளின் வணிக நோக்கு, எழுத்தாளர்கள் பெரும்பாலோரை சொல் வாணிபர்களாக மாற்றியது. புகழையும் பணத்தையும் அதிகமாகப் பெற ஆசைப்படுகிற எழுத்தாளர்கள் எழுத்தின் தரம், இலக்கிய

அந்தஸ்து, புதிய சோதனைப் படைப்பு முயற்சி போன்றவற்றை பலியிட்டு, சகட்டு மேனிக்கு சராசரி எழுத்துக்களின் உற்பத்தியை பெருக்கினர்கள் பத்திரிகைகளின் வாணிபப் போக்கு எழுத்தாளர்கள் ஒரு சிலருக்கு 'ஸ்டார்' தனத்தை சம்பாதித்துக் கொடுத்துள்ளது இலக்கியம் போதுமான வளர்ச்சி பெறவில்லை.

எழுத்தாளர்களுக்கும் சமூக நோக்கு வேண்டும்' சமுதாயப் பார்வையோடு படைப்பு இலக்கியம் உரு வாக்க வேண்டும் என்ற விழிப்பு விடுதலைக்குப் பின்னரே வளர்ச்சியுற்றது.

சிவசு:

எக்காலத்திய சகபடைப்பாளிகள் உங்கள் மனதை ஈர்த்தார்கள்? காரணம் கூற முடியுமா?

வ. க:

நான் எனது இலக்கிய நோக்குக்கு வரம்புகள் கட்டிக் கொண்டதில்லை. என் ரசனைக்கு வேலிகள் அமைத்துக் கொள்ளவில்லை. எதை வேண்டுமானாலும் எழுத லாம், எப்படியும் எழுதலாம்; ஆனால், எழுதப்படு கிறவை தரமானவையாக, கலைத்தன்மையோடு விளங்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு உண்டு ஆகவே, நயமான எழுத்துக்கள், யாரால் எக்காலத்தில் எழுதப்பட்டவையாயினும், என்னை ஈர்க்கும் சக்தி பெற்றனவாகவே இருக்கும்.

மணிக்கொடி எழுத்தாளர்கள் கதைகள் என்னை வசீகரித்தன. 'கல்கி'யின் நல்ல கதைகளை நான் ரசித்தேன்.

என் கால எழுத்தாளர்களான ரகுநாதன், கு. அழகிரி சாமி, தி. ஜானகிராமன், கரிச்சான்குஞ்சு, ராஜ

நாராயணன் எழுத்துக்களும் என்னை ஈர்க்கின்றன. அவர்களுக்குப் பிந்திய ஆ. மாதவன், நீல. பத்மநாபன், ஆதவன் முதலியோரின் படைப்புகளையும் ரசிக்கிறேன்.

இளைய தலைமுறையை சேர்ந்த வண்ணதாசன், வண்ணநிலவன், செயப்பிரகாசம், லிங்கன், ஜெயந்தன், பூமணி, பாலகுமாரன், மாலன், பொன்னீலன் முதலியவர்களது படைப்புகளும் என்னை கவர்கின்றன.

மறுமலர்ச்சி இலக்கிய வாதிகள், முற்போக்கு இலக்கிய வாதிகள் — இப்பிரிவுகளில் எவ்வகையைத் தேர்ந்து கொண்டவராக இருப்பினும், தரத்தோடும் தனித் தன்மையோடும் புதிய பார்வையோடும் எழுதுகிற படைப்பாளிகள் என்னை ஈர்க்கிறார்கள்.

ஜெயகாந்தன் எழுத்துக்கள் எனக்குப் பிடிக்கும்.

சிவசு:

'மணிக்கொடி கால' இலக்கியச் சூழல் எங்ஙனமிருந்தது?

வ. க:

இலக்கியத்தை வளம் செய்வதற்கு தங்களைத் தாங்களே தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற உணர்வோடு மணிக்கொடி கால இலக்கிய வாதிகள் செயல்பட்டார்கள். உலக இலக்கிய அறிவு அவர்களுக்கு அதிகம் இருந்தது. ஒரு சிலர் சமஸ்கிருத இலக்கிய ஞானமும் பெற்றிருந்தார்கள். இலக்கிய ஈடுபாடு அதிகம் கொண்டிருந்தார்கள் — அதாவது சதா இலக்கியங்கள் பற்றிய சிந்தனை, இலக்கிய விஷயங்கள் பற்றிய பேச்சுக்களில் உற்சாகம் உடையவர்களாக இருந்தார்கள். படைப்பாளிகள் ஒவ்வொரு

வருடைய இலக்கிய நோக்கும் போக்கும் வெவ்வேறு ரகமாக இருந்த போதிலும், தமிழ் இலக்கியத்தில் புதுமை சேர்த்தல் என்ற அடிப்படையில் அவர்கள் ஒன்றுபட்டு உழைத்தார்கள்.

அக்காலத்திலும், வாசகர்களிடையே இலக்கிய பிரக்ஞை அதிகம் இருந்ததில்லை. கனமான, ஆழ்ந்த — சிந்தனைக்கு வேலை கொடுக்கிற — படைப்புகளை (பொதுவாக, ஸீரியஸ் லிட்டரேச்சர் முயற்சிகளை) விரும்பிப் படிக்கிற ரசிகர்கள் குறைவாகத்தான் இருந்தார்கள்.

சிவசு:

'சரஸ்வதி கால' இலக்கியச் சூழலைக் கூறுங்களேன்

வ. க:

'சரஸ்வதி' பத்திரிகை நடந்துகொண்டிருந்த காலத்தில் அரசியல் விழிப்பு அதிகம் ஏற்பட்டிருந்தது, கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் தாக்கம் இளைஞர்கள் மத்தியில் பரவலாக இருந்தது. சமுதாயப் பார்வையோடு எழுத வேண்டும் என்ற உணர்வு பெற்ற எழுத்தாளர்கள் தோன்றியிருந்தார்கள்.

'சரஸ்வதி' முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபடுவதைத் தான் முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. ரகுநாதன், ஆர். கே. கண்ணன், எஸ். ராமகிருஷ்ணன் போன்ற கம்யூனிஸ தத்துவப் பிடிப்புமிக்க எழுத்தாளர்களுக்கு அதிகம் இடம் கொடுத்த போதே, கம்யூனிஸப் பற்றுதலிலிருந்து விலகிவிட்ட சுந்தர ராமசாமி, அத்தத்துவச் சார்பை மிகுதியாகப் பிரதிபலிக்காத ஜெயகாந்தன் ஆகியோருக்கும் இடம் தந்தது. அரசியல் தத்துவப் பிடிப்பு எதுவும் இல்லாத

வல்லிக்கண்ணன், சி சு செல்லப்பா, க. நா. சு. ஆகிய இலக்கிய வாதிகளின் துணையையும் அது விரும்பி ஏற்றது. முற்போக்கு இலக்கியத்தில் தீவிர வேகம் காட்டிய இலங்கை எழுத்தாளர்களுக்கும் 'சரஸ்வதி' ஆதரவு அளித்தது.

'சரஸ்வதி' வியாபார வெற்றி பெற முடிந்ததில்லை. அதனுடன் போட்டி போடுவதுபோல் 'தாமரை' கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலேயே வளரலாயிற்று.

ஜனரஞ்சகப் பத்திரிகைகள், பலவுத்திகளையும் கையாண்டு ஸர்குலேஷனை பெருக்கிக் கொண்டிருந்தன. இவ்வழியில் 'குமுதம்' வெற்றிநடை போட்டு வந்தது. இதர பத்திரிகைகளும் அதைப் பின்பற்றுவதில் ஆர்வம் காட்டின.

மனித நேயத்தோடும், சமூகப் பார்வையோடும் எழுதப் பட்ட படைப்புகள் அதிகமாகத் தோன்றலாயின.

'எழுத்து' காலச் சூழல் எப்படி இருந்தது?

'சரஸ்வதி' நடைபெற்ற காலத்திலேயே 'எழுத்து'ம் நடந்தது. அரசியல் சார்பு, சமூகப் பார்வை போன்ற பரந்த நோக்கு கொண்ட இலக்கியப் போக்கை ஆதரிக்கின்ற சிறுபான்மையினரே 'எழுத்து'வின் ஆதரவாளர்கள். 'எழுத்து' படைப்பு இலக்கிய முயற்சிகளைவிட, விமர்சனத்தை வளர்ப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனாலும், அதன் ஆசிரியரான சி சு செல்லப்பாவே எதிர்பாராத விதத்தில், 'எழுத்து' புதுக்கவிதையை வளர்க்கும் ஒரு அரங்கமாகவும், புதுக்கவிதையை இயக்கமாக வளர்க்கும் ஒரு சாதனமாகவும் அமைந்தது. 'எழுத்து'

ஆசிரியர் நோக்கும் போக்கும் இளைஞர்களுக்கு உற்சாகம் அளிக்கவில்லை. அவர் பழமையை பெரிதும் போற்றுபவராகவும், (மணிக்கொடிக் காரர்களோடு இலக்கியம் நின்றுவிட்டது என்று கருதும் மனோபாவம் ஒரு உதாரணம்), புதுமையை திறமையை ஏற்று அங்கீகரிக்கும் இயல்பு இல்லாதவராகவும் இருந்த தனால், 'எழுத்து' நல்ல முறையில் வளர இடமில்லாது போயிற்று. அதனாலேயே, அவரோடு ஒத்துழைக்க முன் வந்தவர்கள் பிறகு 'நடை' என்ற காலாண்டு ஏட்டை துவங்க நேர்ந்தது. 'நடை' நின்ற பிறகு 'கசட தபற' பிறக்க நேர்ந்தது.

முன்பிருந்த சிறு பத்திரிகைகள், இப்போதுள்ளவை இவற்றுக்கிடையே உள்ள வேறுபாடு என்னென்ன? இக்காலத்தியப் போக்கு எங்ஙனம் உள்ளது? தமிழுக்கு எந்த வகையில் பயன்படும்?

முன்பு சிறு பத்திரிகைகள் தனி இலக்கிய நோக்கு மட்டுமே கொண்டு செயல்பட்டன. படைப்பு முயற்சி களை வரவேற்று வளர்த்தன.

பிறகு, விமர்சனப் பார்வை கொண்ட பத்திரிகைகள் வந்தன கலையிலும் ஆர்வம் காட்டின.

அடுத்து, புதுமுறை நாடகங்களில் உற்சாகம் காட்டிய சிறு பத்திரிகைகள், சிறு கதை, கவிதைகளோடு நவீன நாடக வளர்ச்சிக்குப் பாடுபட ஆசைப்பட்டன.

அதே சமயத்தில், சமுதாயம் அரசியல் கொள்கை களை வலியுறுத்தும், மார்க்சீயப் பார்வை கொண்ட ஏடுகளும் தோன்றலாயின. இந்நோக்கிலும், தீவிரமும் தனித்தன்மை காட்டுகின்றன சில பத்திரிகைகள்.

விமர்சனமே முக்கிய நோக்கம் என்று சொல்லிக் கொள்ளும் சிறு பத்திரிகைகள் ஆரோக்கியமான விமர்சனம் வளர்வதற்கு வழி செய்யவில்லை. மாறாக, தனி நபர்களை தாக்குவது, கோஷ்டி சேர்ப்பது, நானே பெரியவன் என்று சுயதம்பட்டம் அடிப்பது போன்ற போக்குகளைக் கொண்ட ஒரு சிலரின் மன அரிப்பை தீர்த்துக் கொள்ளவே உதவியுள்ளன. இவர்களுள்ளும், வெ சாமிநாதன் தருமுசிவராமுவை பழிப்பதும், தருமசிவராமு வெ. சா. வை தாக்குவது—கிண்டல் பண்ணுவது-மட்டம் தட்டுவதும் என்ற விரசமான எழுத்துச் சண்டையையே சில பத்திரிகைகள் வளர்த்துள்ளன. இவற்றால் இலக்கியத்துக்கோ, ரசிகர்களுக்கோ எவ்விதப் பயனுமில்லை. சிலருக்கு கிளுகிளுப்பு தரும்எழுத்துக்களாக இருக்கலாம் இவை.

மார்க்சிய தத்துவ நோக்கில் எழுதுகிறவர்கள் வாசகர்களுக்குப் புரியக்கூடிய முறையில் விளக்கக் கட்டுரைகள் எழுதுவதில்லை. இந்த நாட்டுக்கும் காலத்துக்கும் பொருந்தாத-தேவையில்லாத—எழுதுகிறவரே அரைகுறையாக ஜீரணித்த ஆங்கிலக் கட்டுரைகள் அல்லது புத்தகங்களின்—சுருக்கங்களை எழுதுகிறார்கள், பெரும்பாலும். எழுதுகிறவரை ஒரு 'இன்டெலக்சுவல்'என்று வெளிச்சமிடவே இந்த எழுத்துக்கள் பயன்படும். சிறு பத்திரிகைகள் பயனுள்ள காரியங்கள் பலவற்றை செய்ய முடியும்; ஆனால் இந்த அப்படி செயல்படவில்லை.

சிவசு:

சிறு பதிப்பகங்களின் வெளியீடுகள் தமிழுக்கு எந்த வகையில் துணையாகும்?

வ க:

வணிக நோக்கில் செயல்படுகிற பெரிய பதிப்பகங்கள் சுலபமாக விற்பனையாகக் கூடிய — லைபிரரி ஆர்டர்

எளிதில் கிடைக்கக் கூடிய—புத்தகங்களை மட்டுமே வெளியிடுகின்றன திறமையாளர்கள் — அவர்கள் ஸ்டார் எழுத்தாளர்களாக இல்லாது போனால்—எவ்வளவு சிறப்பாக எழுதியிருந்தாலும், அவர்களது படைப்புகளை பெரிய பதிப்பகங்கள் வெளியிட முன் வருவதில்லை இந்நிலையில், ஆற்றல் பெற்ற இளைய எழுத்தாளர்களின் எழுத்துக்களும், சோதனை ரீதியான முயற்சிகளும் புத்தக வடிவம் பெற வாய்ப்பே இல்லாது போகிறது

சிறு பதிப்பகங்கள் இவ் வகையில் செயல்பட முடியும் திறமையுள்ள இளைய எழுத்தாளர்களின் படைப்புகள், சோதனை ரீதியான இலக்கிய முயற்சிகள், தரமும் தகுதியும் வாய்ந்த எழுத்துக்களை இவை புத்தகமாக்கலாம். அதற்கு உற்சாகமும் உழைப்பாற்றலும், ஆசை நிறைந்த திட்டமும் மட்டும் இருந்தால் போதாதே! பணபலம் வேண்டும் தயாரித்த புத்தகங்களை விற்பனை செய்வதற்குப் பொறுமையும் கடின உழைப்பும் தேவைப்படும்

தமிழில் புதுமையும் வளமும், இளமையும் இலக்கியச் செழுமையும், சிந்தனைச் சிறப்பும். காலத்தோடு ஒட்டிய கருத்து வளர்ச்சியும் செல்வமாகச் சேர்வதற்கு சிறு பதிப்பகங்களே துணை புரிய முடியும்

சிவசு:

இன்று வெளிவரும் பெரும் பத்திரிகைகள் பற்றி தங்கள் எண்ணம் யாது?

வ. க:

பெரும் பத்திரிகைகள் சர்குலேஷனை பெருக்குவதிலேயே குறியாக இருக்கின்றன. இதற்காக, அவற்றுக்குள்ளேயே போட்டி போட்டுக் கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது.

ஜனரஞ்சகமான முறையில் நடத்துவதாகச் சொல்லிக் கொண்டு, வாசகர்களின் ரசனைத் தரத்தை மட்ட மாக்குகின்றன பெரிய பத்திரிகைகள். 'ஸ்டீரியோ டைப்டு' கதைகளும் தொடர்கதைகளும் பெருகுவதற்கு துணை புரிகின்றன. பண போதையும் புகழ்போதையும் கொடுத்து, ஆற்றல் நிறைந்த—தரம் பெற்ற, இலக்கிய ருசி கொண்ட—படைப்பாளிகளையும் தரம் குறைந்த எழுத்துக்களை உற்பத்தி செய்யும் மிஷின்களாக மாற்றி விடுகின்றன.

பெரிய பத்திரிகைகள் சிந்தனையை வளர்க்க விரும்பு வதில்லை. கனமான விஷயங்களை கொடுக்க ஆசைப்படு வதுமில்லை.

சிவசு:

பெரும் பத்திரிகைகளில் சிறுகதை, தொடர்கதை என்று வெளித் தள்ளப்படுபவைகளையோ, அப்படி எழுதுகிறவர்களைப் பற்றியோ எங்ஙனம் எடை போடு கிறீர்கள்?

வ: க:

கதைகளை, ஆரம்பப் பகுதியை படித்தாலே அவை எப்படிப்பட்டவை என்று புரிந்துவிடும். சில கதைகளை மேலோட்டமாகப் படிக்க வேண்டிய தேவை ஏற்பட லாம். தொடர்கதைகளை முதல் ஒன்றிரண்டு அத்தியா யங்களை வாசித்ததுமே, இப்படித்தான் போகும் என்று தெரிந்துவிடும்.

பத்திரிகைகளின் வெற்றிகரமான எழுத்தாளர்களாக விளங்குகிற எழுத்தாளர்களது கதைகள், தொடர் கதைகள் சிலவற்றைப் படித்தாலே, இவர் இன்ன மாதிரிதான் எழுதுகிறார்—எழுதுவார் என்ற ஐடியா ஏற்பட்டுவிடுகிறது அவ்வளவு போதும். அப்புறம்

அவருடைய தயாரிப்புகளை படிக்க வேண்டிய அவசியமே கிடையாது. படிப்பது 'வேஸ்ட் ஆஃப் டைம்' தான்

தரமறிந்து வாசிக்கிற ரசிகர்கள் சில கதைகளை வெகுவாகப் பாராட்டிச் சொல்கிறபோது. அவற்றை தேடிப் பிடித்துப் படிக்கும் எண்ணம் ஏற்படும். படித்தால் திருப்தி உண்டாகும்.

இன்றையப் பத்திரிகைகளின் தேவையை பூர்த்தி செய்வதற்காகக் கதைகளும் தொடர்கதைகளும் உற்பத்தி செய்து தள்ளுகிறவர்கள், உண்மையில் பத்திரிகை வாசகர்களின் 'நொறுக்கு தீனிப்' பசிக்கு தேவைப்படுகிற அசிருசியான தீவனங்களை தயாரிக்கிற 'சரக்கு மாஸ்டர்'களாகத் தான் செயல்புரிகிறுர்கள்.

சிவசு:

எழுத்தை வேள்வியாக எண்ணுபவன், தொழிலாகக் கருதுபவன்—இவர்கள் தங்களைப் பொறுத்து எப்படி?

வ க:

எழுத்தை வேள்வியாகக் கருதுகிறவர்கள், அபூர்வமாக ஒருசிலரே இருப்பர்; இருக்க முடியும். இவர்களுடைய வாழ்க்கையே இவர்களை தகிக்கும் நெருப்பாக அமையும்—சமூகச் சூழலில். போதிய மன உறுதியும், எதிர்ப்படுகிற அனைத்தையும் தாங்கிக்கொள்ளும் மனபலமும், குன்றுத ஆர்வம்—குறையாத ஊக்கம்—தளராத தன்னம்பிக்கையும் பெற்றிருப்பவர்கள் இவ்வழியில் வெற்றிபெற்று, சாதனைகள் புரிய முடியும். இது லட்சியப் பாதை. நான் அடிக்கடி குறிப்பிட்டு வந்திருப்பது போல, 'லட்சியப்பாதை பசும் புல் தடம் அல்ல; ரோஜாவும் மென்மலர்களும் தூவப்பட்ட நடைபாதை இல்லை; காங்க்ரீட் ரோடும் இல்லை.

பண்பட்ட ஒற்றையடித் தடம்கூட இல்லை. கல்லும் முள்ளும் படிந்த கரடுமுரடான வழியே ஆகும்'

எழுத்தை தொழிலாகக் கருதுகிற எல்லாருமே வெற்றி பெற்று விடுவதும் இல்லை. 'வெற்றியைப்போல் வெற்றி தருவது எதுவுமில்லை'-'Nothing succeeds like success' என்றபடி, சிரமப்பட்டும், எப்படியோ முயன்றும், வெற்றி பெற்று விடுகிறவர்களை மேலும் மேலும் வெற்றிகள் தாமே தேடிவரும். எல்லாத் துறைகளிலும் போலவே எழுத்துத் துறையிலும் இது வாழ்க்கை நியதி. புகழ்காந்தியிலும் பண போதையிலும் கிறுகிறுத்துத் போகாதவர்கள், இவ்வழியிலும் நல்லது செய்ய முடியும்.

இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு இனமும் உண்டு—பத்திரிகைகளில் நம்ம பேரும் வர வேண்டும் என்ற ஆசையோடும், பெயர் பெற்றவர்களின் விளம்பர வெளிச்சத்தில் மயங்கி நாமும் இப்படி ஆகிவிடலாம் என்று கனவு கண்டும் எழுதிக்கொண்டிருப்பவர்கள். உண்மையான திறமை குறைவாக இருந்தாலும், பயிற்சியாலும், உழைப்பாலும் 'Craftmanship' அடைந்து இவர்களிலும சிலர் உருப்படியாகசிலவற்றை செய்து முடிக்கக்கூடும்.

சிவசு:

'மாதம் ஒரு நாவல்' என்று பீறிவரும் அச்செழுத்துக்களை என்ன சொல்கிறீர்கள்?

வ.க:

'Monthly discharge' என்று சொல்லலாம். பெண்களுக்கு தவறுது மாதம் ஒருமுறை வெளிப்படுகிற இயற்கை நியதி மாதிரி, மாதம் தவறுது இந்த நிறு

வனங்களும் அச்சுத் தயாரிப்புகளை வெளிப்படுத்திய வாறு இருக்கின்றன.

தாளை வெள்ளைத் தாளாக விற்பனை செய்வதைவிட, கறுப்பு மையால் கறைபடுத்தி, பளபள அட்டைக்குள் அடக்கி. 'புத்தகம்' என்று விற்பதில் அதிக லாபம் கிடைப்பதால், பத்திரிகை நிறுவனங்கங்கள் இந்த உபதொழிலையும் செய்து வருகின்றன.

'குமுதம்' நிறுவனம் ('மாலைமதி'க்காக) இப்படித்தான் கதை இருக்க வேண்டும் என்று திட்டமிட்டு,'ஸம்மரி' கொடுத்து ஸ்டார் எழுத்தாளர்களையோ, இதர எழுத் தாளிகளையோ எழுதச்செய்து, இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கி, 'நாவல்' வியாபாரம் செய்கிறது 2000 ரூபாய்க்காக 'இரண்டே நாளில் ஒரு நாவல்' எழுதி முடித்து விட்டதாக சம்பந்தப்பட்டவர்களும் பெருமையாகச் சொல்லிக்கொள்கிறார்கள். இப்படி இருக்கையில், தரமாவது, கற்பனையாவது, சிருஷ்டிப் புதுமையாவது !

'மாதம் ஒரு நாவல்' தயாரிப்பு வரிசையில், அபூர்வமாக எப்பவாவது ஒரு நல்ல கதையும் வந்துவிடுகிறது! அது மகிழ்ச்சிக்கு உரிய விஷயம்தான்.

சிவசு:

முற்காலத்திய பெண் எழுத்தாளர்கள், இக்காலத்திய பெண் எழுத்தாளர்கள்—பின்னவர்கள் எதனையாவது சாதித்து உள்ளார்களா?

வ க:

முற்காலத்திலும் பெண் எழுத்தாளர்கள் அதிகம் சாதித்தாக சொல்வதற்கில்லை.

முதல் தலைமுறையில், குமுதினி, குகப்பிரியை, அனுத்தமா என்று சொல்லலாம். இவர்கள்கூட பிரமாதமாக இலக்கிய சாதனை புரிந்துவிடவில்லை.

வை. மு. கோதைநாயகி அம்மாள் வாரிசாக 'லக்ஷ்மி' எழுதிக் கொண்டிருக்கிறார் என்று சொல்லலாம்.

அடுத்த வரிசையில், ஆர். சூடாமணி சிறுகதைகளில் சாதனை காட்டியிருக்கிறார். ராஜம்கிருஷ்ணன் நாவல்கள் பல எழுதியிருக்கிறார்

ராஜம்கிருஷ்ணன் வாழ்வின் வெவ்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைப் பிரச்னைகளை நாவல்களுக்கு விஷயமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்; குறிப்பிட்ட இடங்களுக்கே போய், சில மாதங்கள் தங்கி, ஸ்டடி பண்ணி எழுதுகிறார் என்பதுக்காக விசேஷமாகப் பாராட்டலாம். ஆனாலும், அவர் படைப்புகளில் கலைநயத்தை விட, தொழில் திறமையை (Craftmanship) தான் அதிகம் காண முடிகிறது

இன்று எழுதிக் கொண்டிருப்பவர்களில், இந்துமதி நாவலில் நம்பிக்கை காட்டுகிறார் என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்டது. ஆனால், 'வர வர மாமியார்—' என்ற கதையாகிவிட்டது. வாஸந்தி, அனுராதா ரமணன் படிக்கக்கூடிய கதைகள் எழுதுகிறார்கள்.

அம்பை புதுமையான, இலக்கியத்தரமான கதைகள் எழுதினார். அஸ்தமித்து விட்டார் போலும்! ரொம்ப காலமாக இவர் எழுத்து எதையும் காணோம்.

கவிதையில் தனித்துவம் காட்டி மேலோங்கி முன்னேறிய பெண் யாருமே இல்லை.

சிவசு:

அகிலன், நா. பா. இவர்களைவிட, க. நா சு, தி. ஜானகிராமன் அதிகம் தமிழுக்குத் தொண்டு புரிந்துள்ளார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

வ க:

சரியான கணிப்பு என அங்கீகரிக்கிறேன்.

சிவசு

விமர்சனத்துறையில் ஈடுபட்ட சிலரைக் கூறுங்கள் அத்துறை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? இன்று தமிழில் ஆரோக்கியமான சூழல் உள்ளதா? விமர்சனத்தில் தனிமனிதத் தாக்குதல் அவசியமா?

வ. க:

விமர்சனத்துறையில் அதிகமானவர்கள் ஈடுபடவில்லை. சிலர் ஈடுபட்டாலும், தொடர்ந்து விமர்சகராக வளர வில்லை.

விடாப்பிடியாக விமர்சனத்தை வளர்த்தவர்கள்: க நா சுப்பிரமணியம், சி. சு. செல்லப்பா.

இலங்கை டாக்டர் கைலாசபதி, டாக்டர் சிவத்தம்பி அவ்வப்போது ஈடுபட்டவர்கள்: நகுலன், சுந்தரராம சாமியையும் சேர்த்துக்கொள்ளலாம்.

தீவிரமாக ஈடுபட்டு, ஆரோக்கியமில்லாத முறையில் விமர்சனத்தை திசை திருப்பியவர்கள்: வெ. சாமி நாதன், தர்முசிவராமு.

விமர்சனம், ஆக்கபூர்வமாக (Constructive) இருக்க வேண்டும். அழிவு விமர்சனமாக(Destructive criticism) இருக்கக்கூடாது. குறைகளை மட்டுமே வலியுறுத்து வதைவிட, நல்லதன்மைகளையும் நயங்களையும் சுட்டிக் காட்டுவதாகவும் அமையவேண்டும். ஆளைப்பார்த்து எடை போடுவதைவிட, படைப்பின் தன்மைகளை ஆராய்வதே நல்லது.

தற்காலத்தில் தமிழில் விமர்சனத்துறையில் ஆரோக்கியமான சூழ்நிலை இல்லை.

விமர்சனத்தில் தனிமனிதத் தாக்குதல் வேண்டாத விஷயமேயாகும்.

சிவசு:

தமிழ் 'அகடமிசியன்' பற்றி என்ன எண்ணுகிறீர்கள். இவர்கள் தமிழோடு எந்த வகையில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்?

வ க:

அவர்களுடைய 'முறையான கல்விப்பயிற்சி' 'அகடமிசியன்'களின் ரசனைத்திறனை கெடுத்துவிட்டது போலும். அதனால் அவர்களும் மாணவர்களிடம் இயல்பாக இருக்கக்கூடிய ரசனை உணர்வை தீய்த்து விடுவதிலேயே ஆர்வமாக இருப்பதாகத் தோன்றுகிறது. இலக்கியங்களை ஆய்வு செய்வதில் ஈடுபட்டால் கூட. படைப்புகளின் நயங்களையும் படைப்பாளிகளின் நயங்களையும் படைப்பாளியின் உள்ளத்தையும காண முயல்வதற்கு பதிலாக, தேவையில்லாத பட்டியல் தயாரிப்பதிலேயே அவர்கள் உற்சாகம் காட்டுகிறார்கள். தற்கால இலக்கியம் கல்லூரிகளில் பாடத்திட்டமாக வைக்கப்பட்டாலும் கூட, அகடமிசியன்களின் போக்கு பழமையைப் போற்றுவதிலேயே ஆர்வம் காட்டுவதாக இருக்கிறது மாணவர்களுக்கு இலக்கிய ஈடுபாட்டை உண்டாக்குவதற்கு பதிலாக, பரீட்சையில் மதிப்பெண்கள் பெறுவதற்கு ஏற்ற விதத்தில் அவர்களை தயார்படுத்தி விடுவதாகவே தெரிகிறது சில உற்சாகிகள் புதுமை பண்ணுகிறோம் என்று சொல்லி இலக்கியத்தைக்கூட அல்ஜிப்ரா ஆகவும் ஜியாமட்ரியாகவும் மாற்றிக்கொண்டிருக்கிறார்கள் — ஈக்குவேஷன்

போடுவது; ரவுண்ட் கேரக்டர், ட்ரையாங்கிள் என்று என்னென்ன பாகுபாடுகளை எல்லாமோ புகுத்தி!

என்றாலும், அங்கங்கே சில கல்லூரிகளில் தமிழ்த் துறையில் இலக்கிய ஈடுபாடும், ரசனையும், ஆர்வமும் ஆற்றலும் உடையவர்கள் எதிர்ப்படுவது மகிழ்ச்சிக்கு உரிய விஷயம். இவர்கள் படைப்பாளிகளாகவும் இருக்கிறார்கள். ஒரு சிலர் விமர்சனத்துறையில் ஈடுபட்டு, பாராட்டத் தகுந்த முறையில் செயல்புரிந்துகொண்டிருக்கிறார்கள். இந்த ரகத்தினர் அதிகரிக்க வேண்டும்.

சிவசு:

நாடகம் தமிழில் முன்பும் இப்பொழுதும் எப்படி உள்ளது?

வ.க:

தமிழில் நாடகம் எப்போதும் சோனிக் குழந்தையாகவே தான் காட்சி தருகிறது.

சிலப்பதிகாரம் நாடகம் என்று சொல்லிப்பழம்பெருமை பேசுவதும், ஒற்றை மனோன்மணீயத்தைக் காட்டி தமிழிலும் நாடகம் வளர்ந்திருக்கிறது என்று திருப்திப் பட்டுக் கொள்வதும் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிற காரியம்தான்.

உரை நடை வளர்ச்சி பெற்ற பிறகும், தமிழ் இலக்கியத்தில் நாடக மறுமலர்ச்சி ஏற்பட்டுவிடவில்லை.

தற்காலத்தில் இந்திரா பார்த்தசாரதி, ந முத்துசாமி, ஜெயந்தன் முதலியோர் சோதனை ரீதியாக ஓரளவு செய்திருக்கிறார்கள். அவ்வளவுதான்.

சிவசு:

நாடகம் பற்றி உங்கள் Concept என்ன? படித்த சில நாடக ஆசிரியர்களைக் கூறி விமர்சியுங்கள்.

வ.க:

நாடக இலக்கியத்தைப் பொறுத்தவரை, நான் ரொம்ப வும் பின் தங்கியவன். முந்திய தலைமுறை நாடக ஆசிரியர்களின் படைப்புகளைத் தான் படித்திருக்கிறேன். அமெரிக்க நாடகங்கள், பிரிட்டிஷ் நாடகங்கள், பெர்னாட்ஷா, ஆஸ்கார் ஒயில்ட், ஸாமர்ஸட் மாம், மோலியர், ஹென்ரிக் இப்சன். செகாவ். மாக்சிம் கார்க்கி நாடகங்கள் எல்லாம் படித்திருக்கிறேன். ஆனால், மாடர்ன் பிளேரைட்ஸின் மாடர்ன் நாடகங்களை படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியதில்லை.

எனவே, நாடக இலக்கியம் பற்றி நான் திட்டமான கருத்து எதுவும் சொல்வதற்கில்லை.

சிவசு:

டி. கே எஸ். சோ. மனோகர் நாடகங்களிலிருந்து தற்காலத்திய வீதி நாடக இயக்கங்கள் எங்ஙனம் மாறுபட்டுத் தொண்டாற்றுகின்றன?

வ க:

டி கே. எஸ். குழுவினர், வளர்ந்து வந்த சினிமாவுடன் போட்டி போட்டு வியாபார வெற்றி பெறுவதற்காக மேடைக்கலையில் சினிமா உத்திகளை—ஸீன் ஜோடனைகள், லைட்டிங் எபெக்ட், டிரஸ் ஆடம்பரங்கள், தந்திரக் காட்சிகள்—முதலியவற்றை புகுத்தினார்கள். கதை பழைய பாணியிலேயே இருந்தது நடிப்பு பின்னுக்குத் தள்ளப்பட்டது.

சினிமா வெகுவேகமாக முன்னேறிவிட்ட காலத்தில் நாடகத் தொழில் புரியும் மனோகர் மக்களை வசீகரிக்கும் மேடை உத்திகளை, தந்திரக் காட்சிகளை, புராணக் கதை ஆர்பாட்டங்களை அதிகம் கையாள வேண்டியதாயிற்று.

இக்குழுவினர் நாடகங்களில் முதலாளி நடிகர்களுக்கே முக்கியத்துவமும், நடிப்பு வாய்ப்பும் மிகுதியாக அளிக்கப்பட்டன

சோ அரசியல் அங்கதம். அன்றுடப் பிரச்னைகளை விமர்சித்தல், கிண்டல் பண்ணுவது, நகைச்சுவை துணுக்குகளை தொகுத்துத் தருவது முதலிய உத்திகளை கையாண்டு வெற்றி பெற்ருர். சோ நாடகங்கள் சென்னையில் பெற்ற வெற்றிகளை வெளியூர்களில் பெற முடிந்ததில்லை

வெற்றி பெறுகிற சபா நாடகங்களும் அதே தன்மையில்தான் உள்ளன

கோமல் சுவாமிநாதன் புரட்சிக் கருத்துக்களையும் முற்போக்கு அம்சங்களையும் பொருளாதாரப் பிரச்னைகளையும் போராட்டங்களையும் தனது நாடங்களில் பாராட்ட வேண்டிய அளவுக்கு இணைத்து வெற்றி கண்டு வருகிருர்

வீதி நாடக இயக்கம் காட்சி அமைப்பு, அரங்கம், மேக்கப் முதலியன இல்லாமல், நடிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கிற நல்ல முயற்சி. நாடகத்துக்கு உரிய கதை நல்லதாக அமைந்தால், பார்வையாளரை ஈர்க்க இயலும்.

இவ் இயக்கத்தினரின் நாடகங்களைப் பார்க்கும் வாய்ப்புகளை நான் பெற்றதில்லை எனவே விமர்சன ரீதியில் நான் எதுவும் சொல்வதற்கில்லை

சிவசு:

சிறுகதை எப்படி இருக்க வேண்டும்? உங்கள் Cencept அதுபற்றி என்ன?

வ க:

இலக்கியப் பிரிவுகளிலேயே, மிக ஆழமாகவும், வளமாகவும், வெகுவாகப் பரந்துபட்ட தன்மைகளிலும்,

மிகப் பல வகைகளிலும் வளர்ந்திருப்பது சிறுகதை தான். இதைத் தான் எழுத வேண்டும், இப்படித்தான் எழுதவேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்குள் அடங்காத கலை சிறுகதைக்கலை. பிசாசுக் கதை, மாயாஜாலக் கதை, மந்திரதந்திரக்கதை முதலிய கற்பனை வேலைப் படைப்புகள் முதல், வாழ்க்கையின் சிறு சிறு அம்சங் களையும் மனிதர்களின் குணவிசித்திரங்களையும் சித் திரிக்கிற படைப்புகளையும், மனிதர்களின் அவலங்கள், வேதனைகள், கொடுமைகள், கோரங்கள் முதலிய வற்றை எடுத்துக்காட்டும் யதார்த்தப் படைப்புகளையும் பொதுவாக சகலவிதமான சிறுகதைகளையும் நான் எழுதியிருக்கிறேன். எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் எழுதலாம்; ஆனால், எழுதுவதை கலைநயத்தோடு தரமான படைப்பாக ஆக்க வேண் டும் என்பதுதான் என் கொள்கை.

சிவசு:

உங்களுக்குப் பிடித்த மேநாட்டு, தமிழ்நாட்டு சிறு கதை ஆசிரியர் சிலரை கூறுங்கள்.

வ. க:

செகாவ், டால்ஸ்டாய், மாக்சிம் கார்க்கி.

எர்னஸ்ட் ஹெமிங்வே, வில்லியம் ஃபாக்னர், வில்லியம் சரோயன், ஜேம்ஸ் ஜாய்ஸ், மாப்பசான், எட்கார் அலன்போ.

தமிழில்: புதுமைப்பித்தன், லா. ச ராமாமிர்தம், மௌனி, கு. ப ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, பி. எஸ். ராமையா, சி. சு செல்லப்பா, ரகுநாதன், கு. அழகிரிசாமி, சுந்தரராமசாமி, ஜெயகாந்தன், தி. ஜானகிராமன், சூடாமணி

ஆ. மாதவன், ஆதவன். கி. ராஜநாராயணன், பா. செயப்பிரகாசம், அம்பை, ம. ந. ராமசாமி.

வண்ணதாசன், வண்ணநிலவன், பூமணி, ஜெயந்தன் லிங்கன்.

சிவசு:

நாவல் பற்றி உங்கள் Concept என்ன? மேல்நாட்டு, தமிழ்நாட்டு நாவலாசிரியர்கள் சிலரை கூறுங்கள்

வ க:

சிறுகதை வாழ்க்கையின் ஒரு சிறு அம்சத்தை, ஒரு கோணத்தை மட்டும் சித்திரிக்கிறது. நாவல் வாழ்க்கையை பரந்த அளவில் படம் பிடித்துக் காட்டுகிறது. பல்வேறு அனுபவங்களையும், பலவிதமான மனிதர்களையும் சுவாரஸ்யமாக சித்திரிக்க வேண்டும் என்பது தான் என் எண்ணம். சிறு கதை எழுதுவதற்கு சொன்னது நாவலுக்கும் பொருந்தும்.

உலக இலக்கியம்: டாஸ்டாவ்ஸ்கி, டால்ஸ்டாய், கொகோல், ஐவான் டர்ஜனீவ், மாக்ஸிம் கார்க்கி, ஷோலகோவ், பால்ஸாக், எமிலி ஸோலா, சார்லஸ் டிக்கன்ஸ், டி. எச். லாரன்ஸ்.

ஹென்ரி ஜேம்ஸ், எர்னஸ்ட் ஹெமிங்வே, வில்லியம் ஃபாக்னர், ஜேம்ஸ் ஜாய்ஸ், ஹெர்மன் மெல்வில்.

தமிழில்: க, நா. சுப்பிரமணியம், ஆர். சண்முகசுந்தரம். தி ஜானகிராமன், ஜெயகாந்தன், நீல. பத்மநாபன், ஆதவன், நாஞ்சில் நாடன், சு. சமுத்திரம், பொன்னீலன்.

சிவசு:

கவிதை முன்னாலும், இப்பொழுதும் எப்படி உள்ளது

வ க:

முன்பு கவிதையில் புதுமை, வளமான கற்பனை, இனிய சொல் ஓட்டம். சொல் வளம் உள்ளத்தின் உண்மை ஒளி, தனித்த பார்வை, விசாலநோக்கு முதலியன மிகுதியாக இருந்தன. உதாரணமாக, கவி பாரதியாரின் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள்

பிறகு, பாரதியாரையும் பாரதிதாசனையும் பின்பற்றியே செல்வதும் இமிடேட் பண்ணுவதும் அதிகமாயிற்று. சுரதா போன்றவர்கள் ஏதோ புதுமையாகச் செய்திருந்தாலும், பரந்த அளவில் அவர்கள் செயல்படவில்லை.

இதனாலேயே, மரபுக் கவிதை பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் பிறகு வளமாகவும் ஆரோக்கியமாகவும் வளரவில்லை என்று சொல்லவேண்டியிருக்கிறது.

கண்ணதாசன், வாணிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்றெல்லாம் பெயர்கள் சொல்லலாம். ஆனால், ஆழமான-கனத்த, இலக்கிய நிரந்தரத் தன்மை பெற்ற கவிதைகளையோ காவியங்களையோ இவர்களில் எவரும் சாதனை' என்ற தன்மையில் செய்யவில்லை

மனிதாபிமானம் முற்போக்கு என்ற தன்மையில் ரகுநாதன், டி கே எஸ் அருணாசலம், 'கைதி' மற்றும் அநேகர் கவிதைகள் எழுதியிருக்கிறார்கள். ஆனாலும் பாரதி, பாரதிதாசன் அளவுக்கு, அவர்களையும் மீறி முன்னேறும்படி, சாதனைகள் புரிந்திருப்பதாகச் சொல்வதற்கில்லை.

மரபுக்கவிதை பள்ளம் விழுந்த பாதையிலேயே ஊர்ந்து கொண்டிருக்கிறது.

புதுக்கவிதை பாரதியுடன் ஆரம்பித்து, பிச்சமூர்த்தி கு. ப ரா. காலத்தில் வளர்ச்சி பெற்று, 'எழுத்து' காலத்தில் இயக்க வேகம் அடைந்தது. சமூகப்பார்வையும், அரசியல் தத்துவப் பிடிப்பும் கொண்டவர்கள் — வானம்பாடிக் கவிஞர்கள் — புதுக்கவிதைக்கு புதிய வேகமும் வலிமையும் சேர்த்தார்கள் காலப் போக்கில், புதுக்கவிதை வளர்ச்சி குன்றி, குறைபாடுகள் மலிந்ததாகிவிட்டது கவிதைக்கு ஆழம், விசால நோக்கு, சொந்த மனோபாவம், வாழ்க்கை பற்றிய தனி நோக்கு, கற்பனை நயம், அழகு தேவை என்பதை மறந்துவிட்டு, அரசியல் கோஷங்களையும், நகைச்சுவைத் துணுக்குகளையும், வெறும் சொல்வீச்சுக்களையும் போட்டு ரொப்புகிறவர்கள் பெருத்துவிட்டார்கள்.

சிவசு:

புதுக் கவிதையில் உங்களை ஈர்த்த கவிஞர்கள் பட்டியல் தாருங்களேன்.

வ. க:

ந. பிச்சமூர்த்தி, கு. ப. ரா. சி. மணி, வைத்தீஸ்வரன், தி சோ வேணுகோபாலன்' நகுலன், ஞானக்கூத்தன், கலாப்ரியா, பசுவய்யா (சுந்தரராமசாமி) சிற்பி, அப்துல் ரகுமான், மீரா, மு. மேத்தா, புவியரசு, கங்கைகொண்டான், அக்கினிபுத்திரன்.

சிவசு:

எழுத்து யாருக்காக எழுதப்பட வேண்டும்? வாசகன், சமூகம் பற்றி உள்நினைவு படைப்பாளியை உறுத்திக் கொண்டிருக்க வேண்டுமா?

வ. க:

எழுத்து, படித்து ரசிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் எழுதப்படுகிறது. என்றோ வரக்கூடிய-தரமும் அறிந்து படித்து ரசித்துப் பாராட்டக்கூடிய—இனம் தெரியாத சிறந்த வாசகனுக்காக எழுதுவதாகச் சொல்கிற படைப்பாளிகூட, தனது எழுத்து படித்து ரசிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் எழுதுகிறான். 'ஆத்ம திருப்திக்காக' எழுதுவதாகச் சொல்லிக் கொள்கிறவர்கள் 'சும்மா உபசாரத்துக்காகத் தான்' அப்படிச் சொல்கிறார்கள். எழுதுகிறபோது எழுத்தைப் பற்றிய — உணர்வு தான் இருக்கும், ஒரு நல்ல படைப்பாளிக்கு. வாசகனைப் பற்றியும், சமூகத்தைப் பற்றியும் எண்ணிக் கொண்டே எழுதுகிறவன் பத்திரிகைக்குத் தகுந்தபடி கதை, கட்டுரை எழுதுகிறவனாகத்தான் இருப்பான்.

சிவசு:

இலக்கியம் சுய அனுபவ வெளிப்பாடா, அல்லது Secondary information ஆக இருக்கலாமா? இது இல்லாத முற்ற முழுக்கக் கற்பனை எழுத்தை ஏற்க முடியுமா?

வ. க:

இரண்டு விதமாகவும் இருக்கலாம். சுய அனுபவ வெளிப்பாடு உயர்ந்த படைப்பாக, எல்லோரையும் ஈர்க்கும் சக்தி உடையதாக அமைகிறது

சகல உணர்ச்சிகளும் சகலவிதமான நிகழ்வுகளும் சுய அனுபவங்களாக ஒருவனுக்கு சித்திப்பது சாத்தியமில்லை பல்வேறு விஷயங்களையும் எழுதுகிறவன், Secondary information-ஐயும் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது. அப்படி கிரகிக்கிற தகவல்களைக்

கூட அவன் தன் மனதில் அனுபவங்களாக அனுபவித்தே எழுதுகிறான். ஒரு பெண்ணின் பிரசவ நேர வேதனைகளையும் துடிப்புகளையும் பெண்ணைவிட ஆண் படைப்பாளியே திறமையாக இலக்கியமாக்கியிருக்கிறான் என்று உதாரணமாகச் சொல்லப்படுவது உண்டு

'முழுக்க முழுக்கக் கற்பனை' என்பது சாத்தியமே இல்லை. கற்பனைப் படைப்பு கூட வாழ்க்கை உண்மையின் ஒரு சிறு அம்சத்தையாவது அடிப்படையாகக் கொண்டு தான் பெரிய வடிவம் பெற முடியும். எதார்த்தத்தை விட கற்பனையே மிகுதியாக உடைய உயர்ந்த கலைப் படைப்பு நிச்சயமாக வரவேற்பையும் பாராட்டுதலையும் பெறும் புதுமைப்பித்தனின் 'காஞ்சனை', ஆஸ்கார் ஓயில்டின் 'The Picture of Dorian Gray' நல்ல உதாரணங்களாக அமையும்.

சிவசு:

நம் முன்னைய இலக்கியங்கள் சிலம்பு, மேகலை நிலைத்த பேறுடையனவாகத் திகழ்வது போலத் தற்காலத்திய படைப்புக்கள் இல்லையே, ஏன்?

வ.க :

கவிதை—காவியத்தை பொறுத்தவரை இக்கருத்து சரியானது. சிலம்பு, கம்பராமாயணம் போன்ற மாபெரும் படைப்புக்களை ஆக்கும் ஆற்றல் இல்லாமலே போய் விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

உரை நடையில், நாவலில் உலகஇலக்கியக் கொடுமுடிகள் என மதிக்கப்படுகிற டால்ஸ்டாய், டாஸ்டாவ்ஸ்கி, பால்ஸாக் போன்றவர்களின் படைப்புகளுக்குப் பக்கத்திலே நிற்கக் கூடிய மகத்தான படைப்புகள் இதுவரை தமிழில் தோன்றியதில்லை. இந்திய மொழிகளில்

எதிலுமே அத்தகைய படைப்புகள் இன்னும் உருவாக வில்லை என்றுதான் அந்த அந்த மொழி இலக்கிய ரசிகர்கள் அறிவிக்கிறார்கள்.

சிறு கதையில் தமிழ் இலக்கியம் நல்ல வெற்றிகளைப் பெற்றுள்ளது.

மேலும். தற்கால இலக்கிய முயற்சிகளின் நிலைபேறு அல்லது நிலையாமை குறித்து வருங்காலம்தான் உரிய பதிலைத் தர முடியும்.

சிவசு:

எதிர்காலத்தில் இலக்கியம் நிலைபெறப் போகிறது. இதைத் தீர்மானிக்கிறது ரசனை மேம்பட்ட சிலரா, அல்லது பொதுஜனமா?

வ.க:

சந்தேகமில்லாமல், ரசனை மேம்பட்ட சிலர்தான். உண்மை கசப்பானதுதான். சமூகத்தில் பெரும்பாலானவர்களுக்கு இலக்கியம், கலை முதலியவற்றில் அக்கறையோ, ஆர்வமோ, அவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பமோ ஊக்கமோ, கிடையவே கிடையாது. படிக்கத் தெரிந்த எல்லோருமே—படிக்கும் பழக்கம் உடைய வாசகர்கள் அனைவருமே—தரம் அறிந்து படிக்கத் தெரிந்தவர்கள் அல்லர். அவர்கள் தங்கள் ரசனை உணர்வை மேம்படுத்த முடியும். ஆனால், ரொம்பப் பேர் அப்படிச் செய்வதில்லை.

பொதுஜனத்துக்கு, பொதுவாக வாழ்க்கைப் பிரச்னைகளே பெரிதாக இருக்கிறபோது, கலை இலக்கியம் முதலியவைகளில் ஈடுபடுவதற்குத் தேவையான ஓய்வும் மனமும் அவர்களுக்குக் கிட்டுவது கிடையாது. மக்களுக்காகப் படைக்கப்படுவதாகச் சொல்லப்படுகிற நாவல், கதைகள், கவிதைகள்—ஒரு சில நாடகங்

களும் தான்—மக்களை எட்டுவதுமில்லை; மக்களால் வரவேற்கப்படக் கூடிய தன்மையிலும் இல்லை ஓய்வு உள்ள மத்தியதர வர்க்கத்து வெள்ளைச் சட்டை நபர் களால் (White Collared employees) தான் இவை உரு வாக்கப்படுகின்றன. இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் தான் அவற்றைப் படிக்கிறார்கள்; பாராட்டுகிறார்கள் அல்லது குறை கூறுகிறார்கள்.

சிவசு:

எழுத்தாளனுக்கு தத்துவச் சார்பு அவசியமா? இன்று தமிழில் யாராவது அப்படி உண்டா?

வ: க:

தத்துவம் (Philosophy) என்று பொதுவான நோக்கில் எடுத்துக் கொண்டால், உண்மையான—அனுபவ முதிர்ச்சியுடைய—எழுத்தாளன் ஒவ்வொருவனுக்கும் வாழ்க்கை, இந்த உலகம் ஆகியவை பற்றி ஒரு தத் துவ நோக்கு (Philosophical out look) இருக்கத்தான் செய்யும். அது அவனுடைய எழுத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் வெளிப்பட்டவாறு இருக்கும்.

குறிப்பாகச் சில தத்துவ ஈடுபாடுகள்—எக்ஸிஸ்டன் ஸியலிசம் போன்ற ஒன்று—உண்டா, தேவையா என்று பார்த்தால், அது எழுத்தில் ஈடுபடுகிறவர்களின் மனப்பண்பைப் பொறுத்த விஷயம். சார்பு இருந்தே தீரவேண்டும் என்ற அவசியம் ஒன்றுமில்லை.

சமீப சில வருடங்களில், தங்களை 'இன்டெலக்சுவல்ஸ்' என்று காட்டிக் கொள்வதற்காக 'ஜே. கே.'—ஜே. கிருஷ்ணமூர்த்தி-யிடம் ஈடுபாடு கொண்டவர்கள் போல் பேசுவதும், எழுதுவதும் எழுத்துலகத்தில் ஒரு ஃபேஷன் ஆக வளர்ந்துள்ளது.

அரசியல் தத்துவச் சார்பு என்று சொன்னால், மார்க்ஸிய தத்துவத்தில் ஈடுபாடு கொண்ட அநேகர் சிறு கதைகளிலும், நாவல்களிலும் இத் தத்துவப் பார்வையைப் பிரதிபலிக்க முயன்று வருகிறார்கள். டி. செல்வராஜ், பொன்னீலன், சின்னப்ப பாரதி போன்றவர்களைக் குறிப்பிடலாம் இலங்கை எழுத்தாளர்கள் இத் தரத்தில் தீவிரமாக முன்னேறியிருக்கிறார்கள்.

அரசியல் தத்துவச் சார்பு ஒரு எழுத்தாளனுக்குக் கண்டிப்பாக இருந்தே தீர வேண்டுமா என்று கேட்டால், இருந்தே ஆக வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்பதுதான் என் சொந்த அபிப்பிராயம்.

சிவசு:

உங்களின் சார்பு நிலை கூற முடியுமா?

வ. க:

நான் எந்த தத்துவத்தையும் — பொதுவானது, அரசியல் ரீதியானது எதையும்—சார்ந்திருக்கவில்லை.

வாழ்க்கை தான் எனது பாடநூல். மனிதர்களின் அனுபவங்கள் தான் எனக்கு அறிவூட்டும் தத்துவம். மனிதாபிமானமும் அன்பும் தான் எனது மதம்.

நான் முன்பே குறிப்பிட்டுள்ளது போல, எதைப் பற்றியும் எப்படி வேண்டுமானாலும் எழுதலாம். ஆனால், எழுதப்படுபவை தரத்துடன் அழகாக, கலை நயத்தோடு, எழுதப்பட வேண்டும். இதுவே என் கொள்கை.

சிவசு:

வாழ்தலுக்கும் எழுத்துக்கும் உள்ள தொடர்பு என்ன?

வ. க:

வாழ்க்கை வேறு; எழுத்து வேறு தான்.

வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது எழுத்து ஆனாலும், எழுதுகிறவர்கள், தாங்கள் எழுதுகிறபடிதான் வாழ்ந்தாக வேண்டும் என்ற நியதி எதுவும் இல்லை. அப்படி வாழ்ந்துவிடவும் இயலாது.

சொல்லும் செயலும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. ஆனாலும் அப்படி வாழ வாழ்க்கையே அனுமதிப்பதில்லை. ஒரு உதாரணம்: பொய் சொல்லக்கூடாது; சத்தியமே கடைப்பிடிக்கப் பெற வேண்டும் என்பது உயர்ந்த நோக்கு ஆயினும், இதை அன்றாட வாழ்க்கையும் சமூக நிலையும் ஆதரிப்பதில்லை. ஒவ்வொரு நபரும் உணரக்கூடிய நடைமுறை இது.

யோக்கியமான எழுத்துக்களை எழுதுகிறவன் அயோக்கியத்தனமாக வாழ்க்கை வாழ்வதும், அயோக்கியத்தனமான எழுத்துக்களை எழுதிவிட்டு யோக்கிய வாழ்க்கை நடத்துகிறவனும் எந்தக் காலத்திலும் எந்த நாட்டிலும் இருந்திருக்கிறார்கள் — இருக்கிறார்கள்— இருப்பார்கள்.

கூடுமானவரை, சொல்வதுபோல் செய்வதும், எழுதுவதுபோல் வாழ்வதும் விரும்பத் தக்கது; வரவேற்கத் தகுந்தது. பாராட்டப்பட வேண்டியதும்கூட.

சிவசு:

பாரதி வரை, தேர்ந்து எடுத்துப் படிக்கும் வாசகர் நவீன இலக்கியத்தில் சகட்டு மேனிக்கு எல்லாவற்றையும் ரசிப்பது ஏன்?

வ க:

இக்காலத்தில், எல்லாம் வசீகரமான அமைப்புகளிலும் கவர்ச்சி அம்சங்களோடும் கிடைப்பது ஒரு காரணம். பலவும் ருசிகரமாகத் தோன்றுவது ஒரு காரணம்.

அல்வா, ஜாங்கிரி, லட்டு மட்டுமல்லாது, வேறு பல வடிவங்களிலும் வர்ணங்களிலும் கிடைக்கிற இனிப்ட தினுசுகளையும் ரசனை விரும்பத்தானே செய்கிறது? அச மாதிரித் தான் இதிலும்! 'நூறுபூக்கள் மலரட்டும். ஒ வொரு பூவிலும் வெவ்வேறு வாசனையும் அழகு இருக்கக்கூடும்' என்ற மனோ பாவமும் காரணம். 'பரத்த ராசிக்கியம்'—(பரவலான ரசிகத்தன்மை) என்றும் கூறலாம்.

சிவசு:

வாசகர்களா, அல்லது விமர்சகர்களா—இலக்கியத்தை, அதன் தரத்தை நிர்ணயிப்பது?

வ க:

வாசகர்களில், தேர்ந்த ரசனைத் திறம் பெற்ற அனுபவ ஞானிகள்தான் இலக்கியத்தையும் அதன் தரத்தையும் நிர்ணயிக்கிறார்கள். நேர்மையான விமர்சகன் தேர்ந்த ரசிகனே—அனுபவமும் தகுதியும் பெற்ற நல்ல வாசகனே—யாவன். உண்மையில், விமர்சனங்கள் எதையும் ஆக்குவதில்லை. விமர்சனங்கள் சினிமாப் படங்களின் தரத்தை உயர்த்திவிடவுமில்லை: மட்டமான படங்களை பார்க்காதிருக்கும்படி ஜனங்களை பாதித்துவிடவுமில்லை. இதே நியதிதான் இலக்கிய விமர்சன விஷயத்திலும், விமர்சனங்களைப் படித்து விட்டு, எவரும் புத்தகங்கள் வாங்குவதுமில்லை; வாங்க விரும்பும் புத்தகத்தை வாங்காமல் இருந்து விடுவதுமில்லை. எவ்வளவு நேர்மையான, அல்லது கடுமையான, விமர்சனமும் ஆற்றல் நிறைந்த படைப்பாளியை அவனது போக்கிலிருந்து மாற்றுவதில்லை. சில விமர்சனங்கள் சில படைப்பாளிகளுக்கு எரிச்சல் எழுப்பலாம், ஆத்திரம் ஊட்டலாம், கோபம் தரலாம்; எனினும் படைப்பாளிகள் தங்கள் போக்கிலேயே எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியானால், விமர்சனத்தின் நிலைதான் என்ன? படைப்புகளின் தன்மையை ஒரு நோக்கில் எடுத்துச் சொல்கிறது விமர்சனம்; விமர்சகனின் படிப்பறிவையும் பார்வையையும் புலப்படுத்துகிறது ரசனையை வளர்க்கத் துணை புரியவும் கூடும்

சிவசு:

சாகித்ய அகாடமி பரிசினால் உங்கள் பாதையில் ஏற்பட்ட மாறுதல்கள் பற்றிக் கூறுங்கள்

வ: க:

மாறுதல் எதுவும் இல்லை. பத்திரிகைகள் மூலம் விளம்பர வெளிச்சம் (பப்ளிசிட்டி) கிட்டியது. பாராட்டு விழாக்கள் பல இடங்களில் நிகழ்ந்தன. இதனால், அமைதியாக ஒரு இடத்தில் இருந்து, என் விருப்பம் போல் படிக்கவும் எழுதவும் முடியாமல் போச்சு.

சிவசு:

இப்பொழுது 'தீபம்' பொறுப்பாசிரியர். அதனால் ஏற்பட்ட அனுபவங்கள்?

வ. க:

'தீபம்' ஆசிரியர் குழுவில் இடம் பெற்றிருக்கிறேன். ஆனால், பொறுப்பு எதுவும் கிடையாது. எனவே, 'பொறுப்பாசிரியர்' என்று சொல்வது சரியல்ல.

மாதம் தோறும் தலையங்கமும், 'எனது குறிப்பேடு'ம் எழுதிக் கொடுக்கிற பொறுப்பு எனக்கு வந்து சேர்ந்திருக்கிறது! மற்றபடி, ஒவ்வொரு இதழிலும் என்ன கதை, கவிதை, இதர விஷயங்கள் வருகின்றன என்பது இதழ் தயாராகி வந்த பிறகு தான் எனக்குத் தெரிய வருகிறது.

'ஆசிரியர் குழு' அமைப்பு என்பது பத்திரிகைகள் சில தனிப்பட்ட காரணங்களுக்காக—அநேக சந்தர்ப்பங்களில், வெறுமனே பெயர் அளவில் மாத்திரம்—ஆக்கிக் கொள்கிற ஒரு சௌகரிய ஏற்பாடு. அவ்வளவு தான்.

சிவசு:

சமூக மாற்றத்திற்கு இலக்கியம் படைப்பவர்களால் என்ன சேவை செய்ய முடியும்?

வ. க

ஒரு கசப்பான உண்மையை சுட்டிக் காட்டத்தான் வேண்டும் எழுத்து — இலக்கியம் — பெருத்த சமூக மாறுதல்களை உண்டாக்குவதில்லை. தனிநபர்களைக்கூட அதிகம் மாற்றி விடுவதில்லை.

உண்மையில், இலக்கியத்துக்கு அத்தகைய வலிய சக்தி இருக்குமானால், திருக்குறள் எத்தகைய அற்புத மான மாற்றங்களை தனி நபர்களிடத்தும், மனித சமூகத்திலும் விளைவித்திருக்க வேண்டும்!

எப்பவோ ஒரு Uncle Tom's Cabin' போன்ற படைப்பு, ரூசோவின் எழுத்துக்கள் மிகச்சிறந்த விளைவுகளை உண் டாக்கியிருக்கலாம். அதற்கும் காலம், சமூகநிலை, மக் கள் நிலை போன்ற புறக்காரணங்கள் பல இருந்திருக்க வேண்டும்.

திருந்த வேண்டும்—மாற வேண்டும் — என்ற உள் ளுணர்வு உந்துகிறபோதுதான் தனிமனிதன் மாறு கிறான்; சீர்திருந்துகிறான். அந்நேரத்தில், குறித்த ஒரு நிகழ்ச்சி அல்லது எழுத்து அவனை வெகுவாக பாதிக்கும். மற்றப்படி, சட்டமோ, தண்டனையோ, உப தேசமோ, நாடகமோ, எழுத்தோ எவரையும் மாற்றி விட இயல்வதில்லை.

கூட்டத்தை, மக்களை, எழுத்தைவிட, சக்தி வாய்ந்த பேச்சு வெகுவாக பாதிக்கிறது. மார்க் அன்டோனியின் சொற்பொழிவு முதல் ஸி என். அண்ணாத்துரையின் பேச்சு ஈறாக, வரலாற்று ரீதியில் எத்தனையோ உதா ரணங்கள்.

ஆனாலும், இலக்கியம் உண்மையை சொல்ல வேண் டும். வாழ்க்கையை உள்ளது உள்ளபடி பிரதிபலிக்க வேண்டும் வாழ்க்கை பற்றி, மனிதர்களைப் பற்றி சிந்திக்கும்படி வாசகர்கள் உள்ளத்தைத் தொட வேண்டும் அதற்காக, படைப்பாளிகள் மனிதாபி மானத்துடனும், அன்புடனும் எழுத்துக்களைப் படைக்க வேண்டும்

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே யெண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்."

(பாரதியார்)